
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2022 ஜூன் 7 செவ்வாய்க்கிழமை
THINAKARAN
1932 - 2022
வரு. 90 இல. 132 | Tuesday 07, June, 2022 | 12 பக்கங்கள் | 40/-

## இறந்த மாணவனின் கண் தானத்தால் இருவருக்கு பார்வை

**நெகிழ வைத்த பெற்றோரின் காருண்யம்**



கடந்த மே மாதம் 31ஆம் திகதி விபத்தில் உயிரிழந்த கலென்பிந்துனுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது பாடசாலை மாணவனின் கண்தானத்தால் இரு இளைஞர்கள் மீண்டும் பார்வை பெற்றுள்ளனர். கலென்பிந்துனுவெவ, கெட்டலாவ பகுதியைச் சேர்ந்த மாணவன் தக்ஷித இமேஷ் தனபால கடந்த

06

## ஆர்ப்பாட்டம் செய்யும் இளைஞர்களை அரசியலுக்குள் உள்வாங்கத் திட்டம்

**அவர்களே முடிவு செய்ய வேண்டும் என்கிறார் பிரதமர் ரணில்**

**இந்திய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு**



நாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை அரசியல் கட்டமைப்பிற்குள் உள்வாங்க எண்ணியுள்ளதாக தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அவர்கள் அதற்கு தயார் என்றால் அந்த நடைமுறையில் இணைந்து கொள்ளலாம். அதன் மூலம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற பதற்றத்தை சிறிது குறைக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.


'அவர்கள் உள்ளே வரவேண்டும் அல்லது

06

**பொருளாதார நிலைமை; 21ஆவது திருத்தம்**

## பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் இன்று விசேட உரை

**உரை மீதான ஒத்திவைப்பு விவாதமும் இடம்பெறும்**



*ஷம்ஸ் பாஹிம்*

அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்று 07ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 695 பில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீடு தொடர்பான விவாதம் நாளை 8ஆம் திகதி பி.ப 5.30 மணி வரை நடத்துவதற்குப் பாராளுமன்ற

06

**ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம்;**

## மைத்திரி, பாதுகாப்பு பிரதானிகளின் பொறுப்பற்ற தன்மையே காரணம்

**கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு**



முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் அரச புலனாய்வுப் பணிப்பாளர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனக்குறைவு மற்றும் பொறுப்பற்ற தன்மையினாலே பல அப்பாவிகளின் உயிர்களைப் பலிகொண்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஒருவருக்கொருவர்

06

**அனுமதி பெறாது தன்னிச்சையாக விலை அதிகரிப்பு;**

# லாஃப்ஸ் நிறுவனம் விசாரணைக்கு அழைப்பு

**அமைச்சர் நளின் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு உத்தரவு**



**தேவையில்லாமல் உணவுப்பொருட்களை அல்லது எரிபொருட்களை சேமித்து வைக்க வேண்டாம் என மக்களுக்கு வேண்டுகோள்.**



உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிப்பு தொடர்பில் லாஃப் எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக விசாரணை நடத்துமாறு நுகர்வோர் அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக

06

**இந்திய உயர்ஸ்தானிகர் அமைச்சர் ஜீ.எல் சந்திப்பு**

## சவாலான நேரத்தில் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவிப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லே, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, உணவு, எரிபொருள், உரம் மற்றும் மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் உட்பட இலங்கைக்கு தற்போது வழங்கப்படும் உதவிகள் குறித்து உயர்ஸ்தானிகர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு

06

**உத்தியோகபூர்வமாக பயன்படுத்த**

## எம்.பிமாருக்கு புதிதாக 101 வீடுகள் ஒதுக்கீடு

**அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிப்பு**



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வீடுகளாக பயன்படுத்துவதற்காக 101 புதிய வீடுகளை ஒதுக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

06

**புதிய பாராளுமன்ற குழு அமைப்பு;**

## ஒன்றிணைந்து செயற்பட கருவுக்கு பிரதமர் அழைப்பு



புதிய பாராளுமன்ற குழுவை அமைப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு விடுத்த அழைப்பை, அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் கரு ஜயசூரியவுக்கும் இடையில் நேற்று

06

**அமைச்சர் பிரசன்னவுக்கு**

## 02 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிப்பு

**கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



வர்த்தகர் ஒருவரிடமிருந்து 64 மில்லியன் ரூபா கப்பம் வாங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கில் அமைச்சர் பிரசன்ன

06

**புதிய வரி அறவீடுகள் மூலமாக**

## சமூக ஊடகங்களை முடக்க அரசு முயல்வதாக குற்றச்சாட்டு

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு**



வரி அறவீடுகள் மூலம் சமூக வலைத்தள ஊடகங்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக சமூக வலைத்தள பாவனையை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக

06

## ரஷ்ய விமானத்துக்கு விதித்த தடை உத்தரவு இடைநிறுத்தம்

**கொழும்பு வர்த்தக நீதிமன்றம் அறிவிப்பு**



ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் 'ஏரோபுளோட் (Aeroflot Airbus A330) எயார் பஸ் ஏ 330' விமானம் இலங்கையில் இருந்து வெளியேற தடை விதித்து, கொழும்பு

06

## இரண்டு தினங்களில் 4,500 மெ. தொன் Gas நாட்டிற்கு

**நாளை முதல் விநியோகம் என்கிறது லிற்றோ நிறுவனம்**



*லோரன்ஸ் செல்வநாயகம்*

2000 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவுடன் கப்பலொன்று நேற்று நாட்டை வந்தடைந்ததாக லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்தது.

அதேவேளை நேற்று முன்தினமும் 2500 மெட்ரிக் தொன் எரிவாயுவுடன் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது. அதற்கிணங்க

06

## இலங்கைக்கு மீண்டும் உதவ தயாராகும் பங்களாதேஷ்

**தூதுவருடனான சந்திப்பில் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதி**



தற்போதைய நெருக்கடியின் போது இலங்கைக்கு உருளைக்கிழங்குகளை அனுப்ப பங்களாதேஷ் பரிசீலித்து வருகிறது.

(சார்க்) செயலாளர் நாயகம் எசல ருவான் வீரகோனுடனான சந்திப்பின் போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

06

## மக்களுக்கு மீண்டும் உதவிக்கரம் நீட்டும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்!

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் இலங்கை சுற்றுப் பயணத்தின் மூலம் இலங்கைக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட்

06



**20 நாட்டுக்கு பெரும் சாபக்கேடானது அதனால்**

## 21ஆவது திருத்த சட்ட மூலத்திற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு

**கூட்டணியின் பிரதித்தலைவர் திகாம்பரம் MP தெரிவிப்பு**

03



## நைஜீரியாவில் தேவாலயம் ஒன்றில் துப்பாக்கிச் சூடு

**50 பேர் உயிரிழப்பு; பலருக்கு படுகாயம்**

03

## உயர் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் குறித்து ஆராய்வு

**பொலிஸ் ஆணைக்குழு கூட்டத்தில்**

03

## பால்மாவின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம்

**தவிர்க்க முடியாது என்கிறது இறக்குமதி நிறுவனங்கள்**



எதிர்வரும் சில தினங்களில் பால்மாவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படுவதை தவிர்க்க முடியாது என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பால்மா இறக்குமதி நிறுவனங்கள்

06

**அரசியலமைப்பு திருத்தங்கள்;**

## SLPP எம்.பிமார் சிலர் அதிருப்தி தெரிவிப்பு

**பிரதமரிடம் அறிவித்துள்ளதாக தகவல்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

அரசியலமைப்பு திருத்தத்திற்கு அன்றி நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமையளிக்குமாறு பொது ஜன பெரமுன பாராளுமன்ற

06

## கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது

**தொழிலாளர் சங்க கூட்டமைப்பு**



கச்சதீவு என்பது எமது நாட்டிலுள்ள வளமிக்க ஒரு தீவு. எனவே எமது நாட்டிலுள்ள ஒரு தீவை கையகப்படுத்துவதை, சூறையாடுவதை நாங்கள்

06

## ஜோன்ஸ்டனை தேடும் பணிகள் தொடர்கின்றன

**பல பொலிஸ் குழுக்கள் தொடர்ந்தும் விசாரணை**




பல குழுக்கள் அனுப்பப்பட்ட போதிலும், மே 9 ஆம் திகதி அலரிமாளிகை மற்றும் காலி முகத்திடலில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட

06

## சப்புகஸ்கந்தவிலிருந்து நேற்று முதல் டீசல்

**தினமும் 800 மெ.தொ சந்தைக்கு விநியோகம்**



சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நேற்று முதல் டீசல் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

06

# தேயிலை ஏலத்தின் மூலம் 73.13 பில்லியன் ரூபா வருமானம்



இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரை தேயிலை ஏலத்தின் மூலம் 73.13 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 86.23 மில்லியன் கிலோ தேயிலை ஏலம் விடப்பட்டுள்ளதாக இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் பவித்ரா பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேயிலை ஏலத்தில் ஒரு கிலோ தேயிலையின் விலை இரண்டு மடங்காக அதிகரித்து, ஒரு கிலோவுக்கு முன்பு 870 ரூபாவாக இருந்த நிலையில், இன்று 1300 ரூபாயாக உயர்ந்துள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு கிலோ தேயிலையின் சராசரி ஏல விலை 604 ரூபாவாகவும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 871 ரூபாவாகவும் இருந்தது.

தேயிலை ஏலத்தில், தேயிலை உற்பத்தியாளருக்கு 68 சதவீதமும், தேயிலை தொழிற்சாலை உரிமையாளருக்கு 32 சதவீதமும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உரத்தின் விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் காரணமாக தேயிலை உரிமையாளர் பெரியளவில் இலாபம் ஈட்டவில்லை எனவும் உரத் தட்டுப்பாட்டினால் அறுவடை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# "Diving into Digital in Industries" எனும் தொனிப்பொருளில் நடந்த கருத்தரங்கு

Huawei Asia Pacific Digital Innovation Congress மாநாட்டின் இரண்டாவது நாளில், "Diving into Digital in Industries" எனும் தொனிப்பொருளின் அடிப்படையிலான முக்கிய கருத்தரங்கு வெற்றிகரமாக நடைபெற்றது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு தொழில்துறைகளைச் சேர்ந்த 1,000 இற்கும் மேற்பட்ட வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு, டிஜிட்டல் மாற்றத்தில் உள்ள சவால்களைச் சமாளிக்க புதுமையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான நடைமுறைகள் தொடர்பான சவால்களைப் பகிர்ந்து கொண்டனர்.

Huawei Asia Pacific Enterprise Business இன் தலைவர் நிக்கொலஸ் மா (Nicholas Ma) ஆரம்ப உரையை நிகழ்த்தினார். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் வேகமாக விரிவடைந்து வருவதாக தெரிவித்த அவர், அரசாங்கத்தின் தொலைநோக்கு ரீதியான டிஜிட்டல் மூலோபாயம் மற்றும் பரந்த அளவிலான தொழில்துறைகளில் உள்ள பங்கேற்பாளர்களின் கூட்டு முயற்சிகளால் அது பயனடைவதாகவும் தெரிவித்தார். டிஜிட்டல் மயமாக்கல் அனைத்து தொழில்துறைகளிலும் உற்பத்தி முறைகளை மாற்றுமென Huawei எதிர்வுகூறுகின்றது. இது 27 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பை உருவாக்கும்.

இந்நிகழ்ச்சியில், பங்களாதேஷ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் இராஜாங்க அமைச்சர் ஸுனைட் அஹமட் பலக் (Zunaid Ahmed Palak) உரை நிகழ்த்தியபோது, "ICT புரட்சியில் பங்களாதேஷ் வேகமாக வளர்ந்து வருகிறது. புத்தாக்கமான மற்றும் புதுமையான சிந்தனை மூலம் இது சாத்தியப்பட்டுள்ளது. டெவலப்பர்கள், தொழில்துறையில் முன்னணியில் உள்ளவர்கள் மற்றும் சிந்தனையாளர்களுடன் இணைந்து சமூகத்திற்கு மேலும் பெறுமதியானவற்றை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றி மேலும் ஆலோசனை செய்ய முன்வர வேண்டும் என அவர் தெரிவித்தார்.

### இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக

# Asian Banker இனால் HNBக்கு கௌரவிப்பு



Asian Banker சஞ்சிகை வழங்கும் மதிப்புமிக்க சர்வதேச நிதிச்சேவைகள் விருது வழங்கும் நிகழ்வு 2022இல் 12வது தடவையாக இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக மகுடம்சூட்டி, HNB PLC, சிற்றளவு வாடிக்கயாளர் வங்கிச்சேவையில் இலங்கையின் நிகரற்றத் தலைவர் என்ற நற்பெயரை முத்திரைப் பதித்துள்ளது.

உலகின் வாடிக்கையாளர் நிதிச் சேவைகளுக்கான மிகவும் கடுமையான, மதிப்புமிக்க மற்றும் வெளிப்படையான விருதுதிட்டங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்தவிருது வழங்கும் நிகழ்வு, ஸ்திரத்தன்மை, புத்தாக்கம், டிஜிட்டல் செயலாக்கம் மற்றும் செயல்முறை மறுபொறியியலில் விரைவான, நிலையான வளர்ச்சியை அறிமுகப்படுத்துவதில் புதியவரையறைகளை நிறுவும் பிராந்திய நிறுவனங்களைக் காண்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மைல்கல் சாதனை குறித்து கருத்து தெரிவித்த HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ், "ஒருமைப்பாடு கூட்டாண்மைகள் முன்னேற்றத்திற்கு மட்டுமே வழிவகுக்கும் என்ற கொள்கையின் அடிப்படையில் HNB நிறுவப்பட்டது.

134 ஆண்டுகளுக்கும் மேலாக, தலைமுறைகளின் முன்னேற்றத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமமானபெருமை மற்றும் பொறுப்புணர்வோடு இந்தப் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளோம்.

இந்த விழுமியங்கள், சாதகமான காலங்களிலும் பாதகமான நேரங்களிலும் முடிந்தவரை பல மக்களுக்கு சேவையாற்றுவதற்காக, வங்கியைத் தொடர்ந்து அதன் திறன்களை மாற்றியமைக்கவும், காலத்திற்கு ஏற்றவாறு மாற்றங்களை ஏற்படுத்தவும் வழிவகுத்தது." என தெரிவித்தார்.

# இலங்கையின் உறுதியான வங்கி இலச்சினையாக கொமர்ஷல் வங்கி தெரிவு

2022ம் ஆண்டில் தொடர்ந்து மூன்றாவது வருடமாக இலங்கையின் உறுதியான வங்கி இலச்சினையாக கொமர்ஷல் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. உலகின் முன்னணி சுதந்திரமான வர்த்தக இலச்சினை ஆலோசனை சேவை நிறுவனமான பிராண்ட் பினான்ஸ், இலங்கையின் மிகச் சிறந்த பெறுமதி மிக்க உறுதியான வர்த்தக முத்திரையாக கொமர்ஷல் வங்கியைத் தெரிவு செய்துள்ளது.

இதன் மூலம் கொமர்ஷல் வங்கியின் வர்த்தக இலச்சினை இலங்கையில் சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய தெரிவில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறி உள்ளது. 2022 ஏப்ரலில் வெளியிடப்பட்டுள்ள 'பிறேண்ட் பினான்ஸ் ஸ்ரீலங்கா 100' என்ற வெளியீட்டின் மூலம் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறேண்ட் பினான்ஸ், கொமர்ஷல் வங்கி இலச்சினையை 46.7 பில்லியன் ரூபா பெறுமதியானது என மதிப்பிட்டுள்ளது. இது 2021ல் அதன் பெறுமதியிலும் பார்க்க 7 வீதம் அல்லது 3 பில்லியன்கள் அதிகமாகும். வங்கித் துறையில் மிகத் துரிதமாக பெறுமான வளர்ச்சி கண்ட முத்திரையாக அது அமைந்துள்ளது ஏனையவை 3% வளர்ச்சியையே பதிவு செய்துள்ளன.

வர்த்தக முத்திரை உறுதிப்பாட்டுப் பிரிவில் கொமர்ஷல் வங்கியின் வர்த்தக முத்திரை உறுதிப்பாடு 86.7 புள்ளியைப் பெற்றுள்ளது. இதற்கு AAA தரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் உயர்தரம் வழங்கப்பட்டுள்ள வர்த்தக இலச்சினையாக இது காணப்படுகின்றது. பெறுபேறுகளின் தொகுப்பில் ஸ்திரம் மிக்க வர்த்தக இலச்சினை எதிர் காலத்தில் மேலும் பெறுமதியை திரட்டக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான எஸ். ரெங்கநாதன் இது பற்றிக் கூறுகையில் "இன்றைய நிலை வர்த்தகங்களுக்கு மிகவும் சவால் மிக்க காலப்பகுதியாகும்.

இவ்வாறான சூழ்நிலைகளில் வளர்ச்சி காணக் கூடிய வர்த்தக முத்திரைகள் தொட்டுணரக் கூடிய வகையில் தமது வாக்குறுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு பதில் அளிக்கும் வகையில் நாம் காணக் கூடிய விதத்தில் நிலைத்திருக்கக் கூடியவை.

இந்த நிலை எப்போதும் கொமர்ஷல் வங்கியின் ஸ்திரப்பாட்டில் இருந்து வந்துள்ளது. எமது வர்த்தக முத்திரை பெறுமானத்தில் ஒவ்வொரு ஊழியரும் வாழ வேண்டும் என நாம் நம்புகின்றோம்" என்று கூறினார்.

## சர்வதேச செய்திகள்

# நைஜீரிய தேவாலயத்தில் தாக்குதல்: 50 பேர் பலி



வடமேற்கு நைஜீரியாவில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதலில் பல டஜன் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒண்டோ மாநிலத்தில் உள்ள புனித பிரான்சிஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டாளர்கள் ஒன்று கூடி இருந்தபோதே இந்த வான்முறை வெடித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டதாக இந்தத் தாக்குதல் இடம்பெற்ற ஓவோ நகரைச் சேர்ந்த அடெலெக்பே டைமிலியென் என்பவர் குறிப்பிட்டுள்ளார். கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

எனினும் இதில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை அதிகாரிகள் வெளியிடவில்லை. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை.

தேவாலயத்திற்குள் நுழைந்த ஆயுததாரிகள் அங்கு ஆராதனையில் ஈடுபட்டிருந்த வழிபாட்டாளர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி இருப்பதோடு பாதிரியார் ஒருவரையும் அங்கிருந்த சிலரையும் கடத்திச் சென்றதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தேவாலயத்தில் இரத்த வெள்ளத்தில் சடலங்கள் வைக்கப்பட்டிருப்பதும் அங்கிருப்போர் அழுது கொண்டிருப்பதும் வெளியாகியுள்ள வீடியோக்களில் தெரிகிறது.

நைஜீரியாவில் அண்மைய மாதங்களில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நாடு முழுவதும் கடத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்ட மிகப்பெரிய படுகொலை என்று, ஒண்டோ மாநில ஆளுநர் தெரிவித்துள்ளார். தாக்குதல் நடந்த இடத்தையும், காயமடைந்தவர்களையும் அவர் பார்வையிட்டார். தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும், அவர்களது நோக்கம் உடனடியாகத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேவாலயத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நைஜீரிய ஜனாதிபதி முஹமது புஹாரி கண்டனம் தெரிவித்தார். இது கொடூரமானது என அவர் குறிப்பிட்டார்.

பெந்தெகொஸ்தே பண்டிகையின் கிறிஸ்தவ விடுமுறை நாளில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலை கண்டித்த பாப்பரசர் பிரான்சிஸ், பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் நைஜீரியாவுக்காகவும் பிரார்த்தனை செய்வேன் என்று கூறினார்.

கிளர்ச்சியாளர்கள், ஆயுதங்கள் ஏந்தி தாக்குதல்களும் ஆள்கடத்தல்களும் நடத்திவரும் அமைப்புகள் ஆகியவற்றை ஒழிக்க நைஜீரிய அரசாங்கம் போராடிவருகிறது.

# வான் தடையினால் ரஷ்ய அமைச்சரின் பயணம் ரத்து



செர்பியாவின் அண்டை நாடுகள் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவின் விமானம் பறப்பதற்கு அனுமதி மறுத்ததை அடுத்து அவரது பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடான பல்கேரியா, வடக்கு மசிடோனியா மற்றும் மொன்டனிக்ரோ நாடுகளுடன் சேர்ந்து இந்த விமானத்திற்கு தனது வான் பகுதியை மூடியது.

இந்நிலையில் இந்தப் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதை ரஷ்ய வெளியுறவு அமைச்சு உறுதி செய்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததை அடுத்தே ஐரோப்பிய ஒன்றிய வான் பகுதியில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் செர்பியா தொடர்ந்து ரஷ்யாவுடன் நட்புப் பாராட்டி வருகிறது.

# அணு சோதனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



பலுகிஸ்தானில் பாகிஸ்தான் நடத்திய அணு ஆயுத சோதனைகளுக்கு எதிராக ஜெர்மனி மற்றும் பிரிட்டனில் சுதந்திர பலுகிஸ்தான் அமைப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளது. இந்த அணு ஆயுத சோதனைகளால் சங்காய் மக்கள் இன்று வரை நோய் மற்றும் ஏனைய பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

பலுகிஸ்தானின் சங்காய் பகுதியில் 1998 மே 28 ஆம் திகதி பாகிஸ்தான் ஆறு அணு ஆயுத சோதனைகளை நடத்தியது.

இதற்கு எதிராக நெதர்லாந்து வலயத்தின் பலொக் தேசிய முன்னணியும் ஆர்ப்பட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுக்கு ஏவுகணை வழங்க பிரிட்டன் முடிவு



மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான ரஷ்யாவின் எச்சரிக்கைக்கு மத்தியிலும் உக்ரைனுக்கு முதல் முறை நீண்ட தூர ஏவுகணைகளை வழங்கப்போவதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

எம்270 ரொக்கெட் அமைப்பு ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் தம்மை பாதுகாக்க உதவும் என்று பிரிட்டன் பாதுகாப்புச் செயலாளர் பெல் வொல்லஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மூன்று ஆயுதங்களை ஆரம்பத்தில் பிரிட்டன் வழங்கவிருப்பதாக இது தொடர்பான தரப்புகளை மேற்கொள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. உக்ரைனுக்கு ரொக்கெட் அமைப்பை வழங்கப்போவதாக அமெரிக்கா கடந்த வாரம் அறிவித்த நிலையிலேயே பிரிட்டனின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது ரஷ்யாவின் கோபத்துக்குக் காரணமாகியுள்ளது. மேற்கத்திய நாடுகள் நீண்ட தூர ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கினால் உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதல் இலக்கு விரிவடையும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கடந்த ஞாயிற்றுக்கிழமை எச்சரிக்கை விடுத்தார்.

# குரங்கம்மை: 27 நாடுகளில் 780 தொற்றுச் சம்பவங்கள்



குரங்கம்மை நிரந்தர நோயாகக் கருதப்படாத 27 நாடுகளில் 780 சம்பவங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக அளவில் குரங்கம்மை பரவும் அபாயம் மிதமாகவே உள்ளதாக அது கூறியது. எனினும் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கக்கூடும் என்று அது குறிப்பிட்டது.

மற்ற நாடுகளிலும் குரங்கம்மைச் சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டு அது மேலும் பரவும் சாத்தியம் அதிகம் என்று அந்த அமைப்பு தெரிவித்தது.

பாதிக்கப்பட்டோரில் குறைவானோரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை மிக அதிகமாகப் பிரிட்டனில் 207 சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்கு அடுத்த நிலையில் ஸ்பெயினில் 156 பேருக்குக் குரங்கம்மை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அது நிரந்தர நோயாகக் கருதப்படாத நாடுகளில் அதிகம் பரவ ஆரம்பித்தால் பொதுச் சுகாதாரத்திற்கு அபாயம் அதிகமாகலாம் என்று அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# இந்திய கடற்படையில் புதிய படை இணைப்பு




அந்தமான் மற்றும் நிகோபர் கட்டளையகத்தின் கட்டளைத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் அஜெய் சிங்கினால் ஐ.என்.ஏ.எஸ் 325 படைப்பிரிவு இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டிருக்கும் இந்திய கடற்படை வான் படையால் செயற்படுத்தும் உள்நாட்டில் கட்டியெழுப்பப்பட்ட மேம்பட்ட இலகு ரக ஹெலிகொப்டரான எம்.கே 111 அதன் போர் திறனை மேம்படுத்துவதாக உள்ளது.

இதனை கடற்படையில் இணைக்கும் நிகழ்வு போர்ட் பிளேயரில் உள்ள கடற்படைத் தளத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

தங்காலை துப்பாக்கிச்சூடு

# சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மீட்பு



தங்காலை, மொரகெடிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இதன்போது சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

துப்பாக்கி சூட்டு சம்பவத்தின் போது சந்தேக நபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் தங்காலை, மொரகெட்டிய பிரதேசத்தில் வைத்து பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். சம்பவம் தொடர்பில் அருகில் உள்ள வீடுகளில் உள்ளவர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தங்காலை மொரகெட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

கெப் வண்டியில் பயணித்த குறித்த நபரை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் மூலம் குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது உயிரிழந்தவர் 40 வயதுடைய குடாவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இதேவேளை போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தனிப்பட்ட மோதல்கள் காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்று இருக்கலாம் என்றும் நாட்டில் கடந்த வாரங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு போதைப்பொருள் கடத்தல்காரர் களுக்கிடையிலான மோதல்கள் பிரதான காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் அரச ஊழியர்கள்

# வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மை பதிவு செய்ய தொழில் அமைச்சு கோரிக்கை

(ஷம்ஸ் பாஹிம்)



வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வதற்கு எதிர்பார்க்கும் அரச ஊழியர்களின் விபரங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வழங்குமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார கோரியுள்ளார்.

தொழில் நிமித்தம் வெளிநாடு செல்ல விரும்பும் அரச உத்தியோகத்தர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து தமது விபரங்களை பணியகத்தின் இணையத்தளத்தில் உள்ளிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் தலையீட்டுடன் நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈர்க்கும் துரித வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரச உத்தியோகத்தர்கள் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

5 வருடங்களுக்கு வெளிநாடு செல்வதற்கு அரச ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்க பொது நிர்வாக அமைச்சு திட்டமிட்டுள்ளது.அரச உத்தியோகத்தரின் ஓய்வூதியம் மற்றும் சேவை மூப்புக்கு இடையூறு ஏற்படாத வகையில் வெளிநாடு செல்வதற்கு தேவையான சுற்றறிக்கைகளை வெளியிடுவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சுடன் கலந்துரையாட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதில் வெளிநாட்டு வேலை

06


## மசகு எண்ணெய் விலை மேலும் உயர்வு

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 120 அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது.

அதன்படி, ஒரு பீப்பாய் பிரேண்ட் எண்ணெயின் விலை 120 அமெரிக்க டாலர்களாகவும், ஒரு பீப்பாய் டபிள்யு. ரீ.ஜ. மசகு எண்ணெய் விலை 119 அமெரிக்க டாலர்களாகவும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் உலக சந்தையின் எரிபொருள் விலைகளுக்கு அமைய விலைச்சூத்திரத்தின் படி எரிபொருள் விலைகள் தீர்மானிக்கப்படுவது தெரிந்ததே.

## மீண்டும் நாட்டில் டெங்கு அபாயம்



தற்போது பெய்து வரும் மழையினால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விடுமுறை முடிந்து பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய அதிகாரி டொக்டர் இந்திக்க வீரசிங்க தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சலில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்காக குழந்தைகளின் கை, கால்களில் கொசு மருந்து அடிப்பது நல்லது என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகூடிய டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். இந்த நிலையில் மேல்மாகாணத்தை உள்ளடக்கிய வகையில் எதிர்வரும் 15ஆம் திகதி விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நைஜீரியாவில் தேவாலயம் ஒன்றில் துப்பாக்கிச் சூடு

50 பேர் உயிரிழப்பு; பலருக்கு படுகாயம்



நைஜீரியாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள ஓவோ நகரில் செயின்ட் பிரான்சிஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் ஞாயிற்றுக் கிழமை (05) சிறப்பு வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான கிறிஸ்தவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த போது திடீரென அங்கு நுழைந்த மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி ஏந்தியவர்கள் தேவாலய கட்டிடத்திற்கு வெளியேயும் உள்ளேயும் இருந்தவர்களை நோக்கி சுட்டதாக ஓண்டோ மாநில பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எனினும் இந்த தாக்குதலில் தேவாலய பாதிரியார் மற்றும் திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார்கள் காயமின்றி உயிர் தப்பினர். தேவாலயத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு நைஜீரியா அதிபர் முஹம்மது புஹாரி கண்டனம் தெரிவித்தார். இது கொடூரமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



24 ஆவது இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் விகும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவை அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று (6) சந்தித்தார். மரியாதை நிமித்தமாக இந்த சந்திப்பு இடம்பெற்றது.

# மூன்றில் ஒரு மடங்கு தனியார் பஸ்களே நேற்று சேவையில்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக நேற்றைய தினம் வழமையாக சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ் தொகையில் மூன்றில் ஒரு வீதமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.

சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்றையதினம் அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்: இன்றைய தினம் எந்தளவு தொகை பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த முடியும் என்பதை உறுதியாகக் கூறமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளும் நேற்று கல்வி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலை மாணவர்கள் நிலவும் எரிபொருள் நெருக்கடியினால் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

இத்தகைய சூழ்நிலையில் நேற்றைய தினம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் உள்ளிட்ட அன்றாட நடவடிக்கைகளுக்காக பஸ்களில் பயணிப்போர் போதிய பஸ் சேவைகள் இடம்பெறாத காரணத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டது.

அதேவேளை பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் பாடசாலை வேன்கள் நேற்று டீசல் தட்டுப்பாடு காரணமாக பெரும் பாதிப்புகளை எதிர்நோக்க நேர்ந்ததாக அகில

06

20 நாட்டுக்கு பெரும் சாபக்கேடானது

# 21ஆவது திருத்த சட்ட மூலத்திற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு

கூட்டணியின் பிரதித்தலைவர் திகாம்பரம் MP தெரிவிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)




"அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம்தான் இந்த நாட்டுக்கு பெரும் சாபக்கேடாக அமைந்தது. எனவே, ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி, பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை பகிரும் 21 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நாம் ஆதரிப்போம்." என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அட்டனில் நேற்று (06) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இன்று உச்சகட்டத்தில் உள்ளது. இந்நிலைமைக்கு ராஜபக்ச தரப்பே பொறுப்புக்கூற வேண்டும். ராஜபக்ச ஆட்சியில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளால் தான் நாட்டு பொருளாதாரம் சீரழிந்துள்ளது. எரிபொருள் பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை. புதிய அரசு அமைந்த பிறகும்கூட வரிசைகள் தொடர்கின்றன.

06

## பௌத்த மதகுருமார் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிப்பு



புத்தர் பிறந்த பூமியை இந்தியாவில் புத்த பூர்ணிமா என்று பிரபலமாக அறியப்படும் வெசாக் போயா தினம், புத்தரின் பிறப்பு, வாழ்க்கை மற்றும் போதனைகளுடன் தொடர்புடைய மூன்று புனித ஸ்தலங்களில் பிரமாண்டமாகவும் அமைதியாகவும் கொண்டாடப்பட்டது. லும்பினி, பௌத்தகயா மற்றும் புது டெல்லி ஆகிய

06

பொலிஸ் ஆணைக்குழு கூட்டத்தில்

# உயர் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் குறித்து ஆராய்வு



மூன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பில் இன்று (07) நடைபெறவுள்ள ஆணைக்குழு கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சேவை, தேவைகளை காரணம் காட்டி பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மூன்று பொலிஸ் அதிகாரிகளை அண்மையில் இடமாற்றம் செய்துள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களான அஜித் ரோஹன, ராஜித ஸ்ரீ தமிந்த மற்றும் கமல் சில்வா ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரசியல் அழுத்தங்கள் காரணமாக நியமிக்கப்பட்ட 182 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் நியமனம் தொடர்பிலும் இன்றைய பொதுச்சேவை ஆணைக்குழு கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

# பேலியகொட மீன் சந்தைக்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்



பேலியகொட மீன் சந்தையின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, (04) திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். அங்கு விஜயம் செய்து அமைச்சர், சந்தையின் சுகாதாரம் விடயமாக ஆராய்ந்ததோடு சந்தைக்கு எடுத்து வரப்படுகின்ற கடலுணவுகள் மற்றும் ஐஸ் கட்டிகள் தினமும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

சந்தையின் நாளாந்தச் செயற்பாடுகள் தொடர்பாக இதன்போது ஆராய்ந்த அமைச்சர், பல்வேறு தரப்புக்களினால் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்தார்.

குறிப்பாக, சில்லறை வியாபாரிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சந்தையின் கட்டிடத் தொகுதி தமது தொழில் நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றது என்ற குற்றச்சாட்டு, சில்லறை வியாபாரிகளினால் முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒரு மாத காலத்தினுள் நியாயமான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் திருமதி. இந்து இரத்நாயக்கா உட்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

மேலும், சந்தை செயற்பாடுகளை நிரந்தரமாக விஸ்தரிக்கப்பதற்கு ஏதுவாக, அரசுக்கு சொந்தமான காணியை மீன் சந்தைக்கு பெற்றுத் தருமாறும், மேலதிகமாக பிரதான வீதிக்கான ஒரு நுழைவாயிலை அமைக்க ஏற்பாடு செய்யுமாறும் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சர் ஆராய்ந்தார். அரச காணியை பெற்றுக் கொள்வதற்கு புதிய அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கும், நுழைவாயில் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்

06



மீண்டும் லாப் கேஸ் சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும் நிலையில் கொழும்பில் மக்கள் வரிசையில் காத்திருப்பதை காணலாம். (படம்: சுலோசன கமகே)

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 06

### குறள் தரும் சிந்தனை



ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

ஆக்கமும் அழிவும் சொல்லால் ஏற்படும் என்பதால், எந்தவொரு சொல்லிலும் குறைபாடு நேராமல் கவனமாக இருக்க வேண்டும்.

## இலங்கை சிறுவர்கள் எதிர்கொள்ளும் புதுவித வைரஸ் தொற்று அச்சுறுத்தல்!

பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் தற்போதைய சூழலில், நாட்டின் சில பிரதேசங்களில் புதுவித வைரஸ் நோயொன்று பரவி வருகின்றது. குறிப்பாக பிறந்தது முதல் ஆறு மாதங்கள் தொடக்கம் 12 வயதுக்கு உட்பட சிறுவர்கள்தான் இந்நோய் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பலவித அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், சிறுவர்களும் புதுவித வைரஸ் நோய்த் தொற்றின் அச்சுறுத்தலை எதிர்கொள்வது, மக்கள் மத்தியிலான மனஉளைச்சலை மேலும் அதிகரிக்கக் கூடியதாகவே அமைந்திருக்கின்றது.

2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சீனாவில் தோற்றம் பெற்ற கொவிட் 19 தொற்று உலகம் முழுவதும் குறுகிய காலப்பகுதிக்குள் பரவியதோடு, 2020 மார்ச் நடுப்பகுதி முதல் இலங்கையிலும் பதிவாக ஆரம்பித்தது. அதன் விளைவாக 2021 ஒக்டோபர், நவம்பர் வரையான காலப்பகுதியில் இந்நாட்டு மக்களின் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தலில் இருந்து நாட்டை விரைவாகவும் வேகமாகவும் மீட்டெடுக்கவென விரிவான அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக இந்நாட்டில் இத்தொற்று பெருவீழ்ச்சி கண்டுள்ளது. இத்தொற்றைக்கட்டுப்படுத்தவெனமுன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக தற்போதைய பொருளாதார நெருக்கடி தோற்றம் பெற்றுள்ளது. இந்நிலையில் மற்றொரு வைரஸ் நோயின் பரவுதல் அச்சுறுத்தல் தோற்றம் பெற்று இருப்பது மக்களை மேலும் அச்சம் கொள்ளவே செய்திருக்கின்றது.

தற்போது பரவும் வைரஸ் காய்ச்சல், கை கால் வாய் நோய் என அறியப்பட்டுள்ளது. இது தொற்றிப் பரவக் கூடிய ஒன்றாகும். கொழும்பு உள்ளிட்ட சில பிரதேசங்களில் தற்போது இத்தொற்று நோய் வேகமாகப் பரவி வருகின்றது. அதனால் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருகின்ற சிறுவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நோய்க்கு உள்ளாகின்றவர்கள் மத்தியில் காய்ச்சல் பொதுவாக வெளிப்படுகின்ற அறிகுறியாக இருக்கின்ற போதிலும், உடலில் கொப்புளங்களும் அவதானிக்கப்படுகின்றன. சில சிறுவர்களுக்கு நகங்களும் கழன்று விடக் கூடியனவாக உள்ளன.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், 'தற்போது பரவும் வைரஸ் காய்ச்சல் ஒரு தொற்றுநோயே அன்றி உயிராபத்து மிக்கவொன்றல்ல. ஆனால் இந்நோய்க்கான அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள் போதியளவு ஓய்வு எடுத்துக் கொள்ளத் தவறக் கூடாது. அத்தோடு பாடசாலைக்கோ, முன்பள்ளிக்கோ, ஆரம்ப பாடசாலைக்கோ, சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கோ இவர்களை அனுப்பவும் வேண்டாமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா, 'இவ்வைரஸ் காய்ச்சல் ஒருவருக்கு பல தடவை ஏற்படலாம். அதற்காக அச்சமடையத் தேவை இல்லை. இக்காய்ச்சலுக்கு உள்ளாகின்றவர்களுக்கு பரசிட்டமோலை வழங்கி வீட்டிலேயே ஓய்வு எடுக்கச் செய்ய முடியும்' என்றுள்ளார்.

ஆனால் தற்போதைய சூழலில் நோய் அறிகுறி காணப்படுமாயின் அது தொடர்பில் மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்வது தான் ஆரோக்கியமானது. ஏனெனில் காய்ச்சல் என்பது பல்வேறு நோய்களுக்கும் வெளிப்படக்கூடிய அடிப்படை அறிகுறியாகும். அதனால் மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளும் போது நோய் அறிகுறிக்கான காரணத்தை அறிந்து அதற்குரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவ்வாறு சிகிச்சை பெறும் போது நோயில் இருந்து விரைவாகவும் வேகமாகவும் பூரண சுகத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதேநேரம் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக மருந்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை மருத்துவ நிபுணர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். அதனால் தற்போதைய சூழலில் சிறுவர்களின் ஆரோக்கியம் தொடர்பில் அதிக கவனமும் சிரத்தையும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இது பெற்றோர்களதும் உறவினர்களதும் பொறுப்பாகும்.

அதனால் சிறுவர்களை கண்டபடி வெளியில் நடமாட இடமளிக்கலாகாது. அத்தோடு, பயணங்களில் சிறுவர்களை அழைத்து செல்வதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. இவற்றின் ஊடாக இந்நோயின் பரவும் அச்சுறுத்தலை முறியடித்து நோயைக் கட்டுப்பாட்டு நிலைக்கு துரித கதியில் கொண்டு வரக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கதிர்காமக் கந்தன் பாதயாத்திரை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பம்

கொரோனா தாக்கம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து விஷேட பூசை வழிபாடுகளுடன் பாரம்பரிய பாதயாத்திரை காலை ஆரம்பமாகியது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 03 மாகாணங்களின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ,மொனராகலை ஆகிய ஏழு மாவட்டங்களையும் இணைக்கும் வகையில் 52 நாட்கள் இந்த யாத்திரை நடைபெறும். 572 கி.மீற்றர் தூரம் கொண்ட இலங்கையின் மிக நீண்ட கதிர்காமம் பாதயாத்திரை இதுவாகும்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய திருவிழா எதிர்வரும் ஜுலை

### 572 கி. மீ தூரத்தைக் கடந்து பக்தர்கள் 52 நாட்கள் பயணம்

மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 15 தினங்கள் திருவிழா இடம்பெற்று ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

அதனை முன்னிட்டு ஜுலை மாதம் 20 ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காமம் செல்வதற்கான காட்டுப்பாதை திறக்கப்படுகிறது. உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக பாதயாத்திரை கதிர்காமத்தை சென்றடையும்.





1000 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியமிக்கதாக இந்த புனித பாதயாத்திரை விளங்குவதாக ஆன்றோர் கூறியுள்ளனர். இந்தக் கதிர்காம பாதயாத்திரையானது தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான பக்தி மார்க்கமாகும். ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்றி அனைத்து தரப்பினரும் கதிர்காமம் பாதயாத்திரை செல்வது வழக்கமாகும்.

ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை பக்தர்களுக்குக் கொடுக்கிறது.

காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், குளிர் காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி என்றெல்லாம் பல அனுபவங்களை கதிர்காமம் பாதயாத்திரை பக்தர்களுக்குத் தருகின்றது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான காற்றைச் சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு கதிர்காமம் பாதயாத்திரை செல்வதாக பக்தர்கள் தங்களது அனுபவங்களைக் கூறுகின்றனர்.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் கிடைக்கிறது. மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக யாத்திரையில் அனைவரையும் அழைத்து செல்வதாக பக்தர்கள் நம்புகின்றனர்.

வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

# பத்திரிகை, இலக்கியத் துறைகளில் பலருக்கு வழிகாட்டியாக பணியாற்றியவர் க.ப.சிவம்

### அன்னாரின் 3 ஆவது நினைவு தினம்

கண்டி பிரதேசத்தில் மிகப் பிரபலமான செய்தியாளராக திகழ்ந்தவர் மூத்த பத்திரிகையாளர் க. ப. சிவம் அவர்கள். 'மலைமுரசு' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி ஊடகத் துறையில் தனக்கெனமுத்திரை பதித்தவர் அவர்.

கண்டி அம்பிட்டிய, மீக்குனுவ பகுதியில் 13.05.1933 இல் கருண்ணப்பிள்ளை_ பச்சையம்மாள் தம்பதியருக்கு மகனாக அவர் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அம்பிட்டிய சென் மேரிஸ் ஆர். சி. தமிழ் பாடசாலையில் கற்றார். உயர் கல்வியை கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கற்றார்.

தனது மாணவப் பருவத்தில் இருந்து சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் ஆகியவற்றை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். சிவம் சிறந்த மேடைப் பேச்சாளர். தமிழில் மாத்திரமல்ல சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சிறப்பாக உரையாற்றக் கூடியவர்.

1949 ஆம் ஆண்டு கவிஞர் எஸ். எஸ். நூதனை ஆசிரியராகக் கொண்டு வெளிந்த 'பகுத்தறிவு' இதழில் இவரது முதலாவது கட்டுரை வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து 1950 களில் வெளிந்த ' உரிமைக் குரல் , நாம் , தொண்டன், அண்ணா, சமூக முன்னேற்றம், மலைப்பொறி, விடிவு போன்ற இதழ்களில் எழுதினார்.

தமிழ் நாட்டில் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் தாக்கம் இலங்கையிலும் இளைஞர்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. மலையகத்தில் தோழர் ஏ. இளஞ்செழியன் தலைமையில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. சிவம் தனது தந்தையாரின் தடையை மீறி தி. மு. க. கொள்கை பரப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றார். தனது மேடைச் பேச்சின் திறத்தால் மலையக இளைஞர்களை எழுச்சி பெறச் செய்தார்.

தோட்டம் தோட்டமாகச் சென்று பகுத்தறிவுப் பிரசாரத்தை மேற்கொண்டார். பல சீர்திருத்த திருமணங்கள் நடத்தி வைத்தார். 1958 ஆம் ஆண்டு கண்டியில் முத்தமிழ் மன்றம் எனும் அமைப்பை ஆரம்பித்து கலை இலக்கிய கலாசார நிகழ்வுகளை நடத்தியுள்ளார். 1959 களில் மலையகத்தில் இளைஞர்களிடையே ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது. மலையக புத்திஜீவிகள் இணைந்து 'மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் ' என்ற அமைப்பு இளைஞர்களின் தளபதி எனப் போற்றப்பட்ட இர. சிவலிங்கம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

பி. டி ராஜன் வழிகாட்டலில் இச்சங்கத்தில் சிவம் முக்கிய பங்கேற்று அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக திகழ்ந்தார்.

1950 ஆம் ஆண்டு கவிஞர் ஈழக்குமாரும் க. ப. சிவமும் இணைந்து 'மலைமுரசு' என்ற சஞ்சிகையை ஆரம்பித்தார்கள். மலையக எழுத்தாளர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் பெரும் பணியை ஆரம்பித்தது மலைமுரசு. முலையகத்தில் முதன் முதலாக மலையகச் சிறுகதைப் போட்டி



ஒன்றை நடத்திய பெருமையும் 'மலைமுரசு' சஞ்சிகையே சாரும்.

க. ப சிவம் கலை உலகிலும் கால் பதித்துள்ளார். 1965 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை கண்டியில் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றினார். அத்துடன் கிங்ஸ்லி எஸ். செல்லையா கண்டியில் மேடையேற்றிய பல நாடகங்கள், டொக்டர் நந்தி மேடையேற்றிய 'கருங்குகள்', நவாலியூர் நா. செல்லத்துரை மேடையேற்றிய ' எதிர்பாராத முடிவு' முடிவு ஆகியன மேடையேறுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினார்.

1965 ஆம் ஆண்டு தொடக்கம் கண்டி பிரதேசத்தில் பத்திரிகை நிருபராக பணியாற்றி வந்தார். 54 ஆண்டு காலமாக பிரதேச நிருபராக பணியாற்றினார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையக கலை இலக்கியப் போவை, மத்திய மாகாண இந்து மாமன்றம் போன்ற அமைப்புக்களின் ஸ்தாபக உறுப்பினர் இவர்.

கண்டி கலா ரசிகர் மன்றம், மலையக கலை இலக்கியப் பேரவை, மலையக கலாசார சங்கம் (இரத்தின தீபம்) இரத்தினபுரி நல்லுறவு ஒன்றியம் ஆகியன இவரைப் பாராட்டி கௌரவித்துள்ளன.

1994 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சின் தேசிய சாஹித்திய விழா விருதும் 'தமிழ் மணி' என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1998 ஆம் மத்திய மாகாண தமிழ் சாஹித்திய விழாவில் விருது, சான்றிதழ், பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார். இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது பெற்றார். அரச கௌரவமான கலாபூசணம் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது. மலையக கலாசார சங்கம் க.ப. சிவம் அவர்களைப் பாராட்டி 'இரத்தின தீபம்' பட்டம் வழங்கி கௌரவித்தது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ் சங்க சான்றோர் விருதும் வழங்கப்பட்டது. நடிகர் காமினி பொன்சேகா தயாரித்த சிங்களத் திரைப்படமான 'சாகரிய மெத' என்ற திரைப்படத்தில் சிறு பாத்திரம் ஏற்று அவர் நடத்துள்ளார்.

எழுத்துலகில் பலருக்கு மேடையில் களம் அமைத்துக் கொடுத்தவர் என்ற பெருமை க. ப. சிவம் அவர்களையே சாரும். இன மத மொழி வேறுபாடுகளுக்கப்பால் எல்லா சமூகத்திற்கு ஒரு பயனுள்ள மனிதராக அவர் வாழ்ந்தார். மூத்த பத்திரிகையாளர் அமரர் க. ப சிவம் அவர்களின் மறைவு தமிழ் பத்திரிகை உலகில் என்றும் ஈடு செய்ய முடியாதது ஒன்று.

இக்பால் அலி

# வேலைவாய்ப்புத் தேடுவோருக்கும், தொழில் தருநர்களுக்கும் பயன்தரும் Palamuwen.com தளம் அறிமுகம்

தொழில் தருநர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், தமது கனவுத் தொழிலை எங்கும் தேடிக் கொண்டிருக்காமல் தமக்கு மிகப் பொருத்தமான தொழில் தொடர்பான வெற்றிடங்கள் குறித்து அறிந்து கொள்வதற்காகவும், தொழில் தேடுவோருக்கு தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு தளத்தின் அவசியம் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது.

மறுபுறத்தில், தொழில் வெற்றிடம் தொடர்பாக விளம்பரம் செய்யும் போது, அது தொடர்பான விண்ணப்பங்களை தொழில் தருநர்கள் பெற்றுக் கொள்ளும் போது பொருத்தமான மற்றும் பொருத்தமற்றவை உள்ளடங்கலாக, அவற்றிலிருந்து சரியான விண்ணப்பங்களை தெரிவு செய்வதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இது, பல நிறுவனங்களில் தொழிலாளர்களை இணைத்துக் கொள்வதிலும், தெரிவு செயன்முறையின் தரத்தையும் எதிர்பாராத அளவில் பாதித்துள்ளது.

சிறிய, நடுத்தர நிறுவனங்கள் பெரும்பாலானவற்றில் மனிதவள முகாமைத்துவப் பிரிவு இல்லாத காரணத்தால் தகுதியான மற்றும் திறமையான தொழிலாளர்களை தமது நிறுவனங்களுக்குள் உள்வாங்க முடியாத சூழல் காணப்படுகின்றது. நிபுணத்துவம் மிக்க / திறமையான நபரின் ஈடுபாடு தேவைப்படும் எமது அன்றாட நடவடிக்கைகள் பலவற்றுக்கு பொருத்தமான வளங்களைத் தேடுவது, குறிப்பாக அவசியமான இடத்தில் பெற்றுக் கொள்வது மிகவும் கடினமான ஒன்றாக மாறியுள்ளது. இந்த வளங்களைத் தேடுகின்ற போது கணிசமான அளவு நேரம் வீணடிக்கப்படுகிறது.

இந்நிலையில், நீங்கள் எங்கிருந்தாலும் ஸ்மார்ட் தொலைபேசி வழியாக வளங்களைக் கண்டறியும் வகையிலான, பயனர்கள் இலகுவாக பயன்படுத்தக் கூடிய டிஜிட்டல் தரவுத்தளத்தின் அவசியம் காணப்படுகின்றது.




அனைவரும் பயன்படுத்தக் கூடிய வகையிலான தொழில் வங்கியை கொண்டமைந்த தளத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம், Palamuwen இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கின்றது. இது தொழில் வழங்குநர்களுக்கு மட்டுமன்றி, தொழில் தேடுவோருக்கும் நன்மை பயக்கும். தொழில் தேடுவோர் தமது சுயவிபரங்களை Palamuwen.com தளத்தில் பதிவேற்றுவதற்கு நாம் அனுமதிப்போம். இந்தத் தளத்தின் ஊடாக பொருத்தமான பணியாளர்களை பெற்றுக் கொள்வதற்கு நாம் நிறுவனங்களை ஊக்குவிக்கின்றோம்.

தொழில் தேடுவோர் மற்றும் சுயாதீன தொழிலாளர்களுக்கான ஒரு பாரிய தரவுத் தளத்தை உருவாக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஒரு தொழில் வெற்றிடத்திற்கு விளம்பரம் செய்யும் போது அவர்கள் பெற்றுக் கொள்ளும் பல விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்வதை விட, இந்த தரவுத்தளத்தின் ஊடாக தொழில் தருநர்கள் தமக்கு தேவையான தொழிலாளர்களை தெரிவு செய்து கொள்ள முடியும். சரியான விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் படலத்தில், நிறுவனங்களின் மனிதவள மேம்பாட்டு துறைகளுக்கு உதவும் நோக்கில் எதிர்காலத்தில் வேறு பல சேவைகளையும் நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.

எனவே, உங்கள் தொழில் வெற்றியின் வாழ்நாள் துணையாக Palamuwen அமையும். பயனர்கள் தமது சுயவிபரங்களை அடிக்கடி புதுப்பிக்கும் வசதியை நாம் வழங்குகின்றோம். இதன் மூலம், அவர்களது புதுப்பிக்கப்பட்ட தகவல்கள், தொழில் தருநர்களுக்கும் உரிய தொழிலாளர்களை தேடிக் கொண்டிருப்போருக்கும் கிடைக்கும். மூன்று மொழிகளிலும் இந்தச் சேவை வழங்கப்படுகின்றமை, Palamuwen.com இன் தனித்துவமான அம்சங்களில் ஒன்றாகும். Palamuwen.com ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான விபரங்களையும் உள்ளடக்கும் வகையில் எமது சேவைகள் விரிவுபடுத்தப்படும். வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவியுடன், இந்த வெளிநாட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் நாட்டிலுள்ள திறமைசாலிகளுக்கு உதவுவதே எமது பிரதான நோக்கங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இது, தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்கும், இலங்கைக்கு மிகவும் அவசியமாகக் காணப்படும் வெளிநாட்டு நாணய உள்வருகையை மேம்படுத்துவதற்கும் ஒரு வழியாகக் காணப்படுகின்றது.

# தாராள மனதுடன் கொடுத்தால் ஆண்டவரின் ஆசீர்வாதம் நிச்சயம்

## பரிசுத்த வேதாகமம் தரும் இன்றைய சிந்தனை

தாராள மனதுடன் நாம் பிறருக்கு கொடுக்கும்போது ஆண்டவருடைய ஆசீர்வாதம் எமக்கு பலமடங்காக கிடைப்பதை இன்றைய நாள் வாசகங்கள் எமக்கு உணர்த்துகின்றன.

இன்றைய முதல் வாசகத்தில் கைம்பெண்ணுடைய தாராள குணம் பற்றி கூறப்படுகிறது. எலியாவினுடைய வார்த்தையை ஏற்று தன்னிடமிருந்த உணவை அவர் பகிர்ந்து கொள்கிறார். அதன் மூலம் ஆண்டவர் அவருக்கு அதிகமான உணவை வழங்குகின்றார்.

அதேபோன்று இன்றைய நற்செய்தி வாசகத்தில் உப்பும் ஒளியும் தாராளமாக தம்மை மற்றவர்களுக்காக கொடுப்பது போல பிறரது வாழ்வுக்கு நாமும் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

அவ்வாறு நாம் வாழும் போது ஆண்டவருடைய ஆசீர்வாதம் எமக்கு அதிகம் அதிகமாக கிடைப்பதை இந்த வாசகங்கள் உறுதிப்படுத்துகின்றன.

முதல் வாசகத்தில் தாராள மனம் தொடர்பில் தெரிவிக்கப்படுகிறது.

"மழை பெய்யாத காரணத்தினால் ஓடையும் வற்றிப் போனது. ஆண்டவரது வாக்கு எலியாவுக்கு கிடைத்தது." நீ புறப்பட்டு சீதோன் பகுதியிலிருக்கும் சரி பாத்துக்குப் போய் அங்கே தங்கியிரு. அங்கு உனக்கு உணவளிக்குமாறு ஒரு கைம்பெண்ணை கட்டளையிட்டிருக்கின்றேன்."என்றார் ஆண்டவர். எலியா



புறப்பட்டு சாரி பாத்துக்குப் போனார் நகரின் நுழைவாயிலை வந்தடைந்த பொழுது அங்கே ஒரு கைம்பெண் சுள்ளிகளைப் பொறுக்கி கொண்டிருந்தார். அவர் அவரை அழைத்து ஒரு பாத்திரத்தில் எனக்கு குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா என்றார். அவர் அதைக் கொண்டு வந்து வர செல்கையில் அவரை கூப்பிட்டு எனக்கு கொஞ்சம் அப்பமும் கையோடு கொண்டு வருவாயா? என்றார். அவரோ, வாழும் உன் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை. என்னிடம் அப்பம் ஏதுமில்லை. பானையில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணெய்யுமே என்னிடம் உள்ளன. இதோ இப்போது இரண்டொரு சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு வீட்டிற்குப் போய் அப்பம் சுட்டு நானும் என் மகனும் சாப்பிடுவோம்.அதன்பின் சாகத்தான் வேண்டும் என்றார்.

எலியா, அவரிடம் "அஞ்சவேண்டாம் போய் நீ சொன்ன படியே செய். ஆனால் முதலில் எனக்கு ஒரு சிறிய அப்பம் சுட்டு கொண்டு வா. பிறகு உனக்கும் உன் மகனுக்கும் சுட்டுக் கொள். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே:

நாட்டில் ஆண்டவர் மழை பெய்ய செய்யும் நாள் வரை பானையில் உள்ள மாவு தீராது கலயத்தில் உள்ள எண்ணெயும் குறையாது என்று சொன்னார்.

அவர் போய் எலியாசொன்னபடியே செய்தார். அவரும் அவருடைய மகனும் அவர் வீட்டாரும் பல நாள் சாப்பிட்டனர். எலியா வழியாக ஆண்டவர் உரைத்த வாக்கின்படி பானையிலிருந்து மாவு தீரவில்லை.

கலத்திலிருந்து எண்ணெயும் குறையவே இல்லை. என்பதையே இன்றைய முதலாவது வாசகமான அரசர்:17:716 நமக்கு வாழ்க்கைக்கான படிப்பினையூட்டுகின்றது.

நாமும் நம்மிடம் உள்ளதை தாராள மனதுடன் பிறருக்கு பகிர்ந்தளித்தால் ஆண்டவருடைய ஆசீர்வாதம் நிறைவாக எமக்கும் எமது குடும்பங்களுக்கும் கிடைக்கும். அதற்காக இறையருளை வேண்டுவோம்.

எல்.செல்வா...






## கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி சிறப்பாக கொண்டாடப் பட வுள்ளது. கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 6.00 மணிக்கு நவநாள் ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

அதனையடுத்து எதிர்வரும் 12ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் வெஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற வுள்ளது.

13ஆம் திகதி காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 6.00 மணிக்கு அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரினால் தமிழில் திருப்பலிப் பூசை நிறைவேற்றப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம்பெறவுள்ளது. அதனையடுத்து இரவு 8.00மணியளவில் புனித அந்தோனியாரின் திருச்சொரூப ஆசீர்வாதம் பேராயரினால் வழங்கப்பட வுள்ளது.(ஸ)

## புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலய திருவிழா











மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் நவநாள் ஆராதனை இடம்பெற்று தினமும் 5.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும் இடம்பெற்றன.

முதல் நன்மை மற்றும் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் திருப்பலியானது மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு யோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புனிதரின் திருச்சுரூப பவனி,திருப்புகழ் மாலை ஆராதனையும், நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

நவநாட் காலங்களில் அருட் தந்தையர்களினால் சிறப்பு அருளுரைகளுடன் திருப்பலி பூசைகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

திருவிழா தினத்தில் திருவிழா கூட்டுத்திருப்பலியானது அருட்பணி எக்ஸ்.ஐ.ரஜீவன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. கூட்டுத் திருப்பலியினைத் தொடர்ந்து புனிதரின் இறுதி ஆசீருடன் கொடியிறக்கப்பட்டு திருவிழா இனிதே நிறைவுபெற்றது.

படங்கள், தகவல்:
கல்லடி குறூப் நிருபர்



# திருச்சபை கொண்டாடிய இரு பெருவிழாக்கள்

## தூய ஆவியானவரின் திருவிழா

## திருச்சபையின் பிறந்தநாள் விழா

கத்தோலிக்கத் திருச்சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை தூய ஆவியானவர் திருவிழாவை கொண்டாடியது. பெந்தகோஸ்து பெருவிழா என அழைக்கப்படும் இந்த திருவிழா உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகின்ற ஒன்றாகும்.

தூய ஆவியானவர் பெருவிழா தினத்தில் கத்தோலிக்கத் திருச்சபையானது அதன் பிறந்த நாளையும் நினைவு கூறுகின்றது. அந்த வகையில் இரு பெரும் பெருவிழாக்களைக் கொண்ட தினமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை திகழ்ந்தது.

உலகம் யுத்தம் வறுமை பொருளாதார நெருக்கடிகளில் என பல்வேறு இன்னல்களை சந்தித்து வரும் இக்காலத்தில் உலக அமைதிக்காகவும் நெருக்கடிகளில் இருந்து அனைத்து நாடுகளும் மக்களும் மீண்டு இயல்பு வாழ்க்கை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் இந்த இருபெரும் திருவிழாவில் விசேட மன்றாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

நம் ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின் அவரின் துணையாளராக வரும் தூய ஆவியானவர் திருத்தூதர்களை இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கும் நீட்சிகளாக வழிநடத்துகிறார்.

படைப்பின் தொடக்கத்திலேயே நீர்த்திரளின் மேல் அசைந்தாடிக் கொண்டிருந்த கடவுளின் ஆவியானவர் (தொநூ 1:2) உலகின் இறுதி வரைக்கும் உடன்பயணிக்கும் துணையாளராகச் செயற்படுகின்றார்.

“உலகிலே செய்யுமாறு தந்தை மகனிடம் ஒப்படைத்த வேலையைச் செய்துமுடித்ததும் திருஅவையை எந்நாளும் தொடர்ந்து தூய்மையாக்கவும், இதனால் நம்பிக்கை கொண்டோர் எல்லோரும் கிறிஸ்துவின் வழியாக ஒரே ஆவி மூலம் தந்தையை அணுகும் பேறுபெறவும் பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவி அனுப்பப்பெற்றார்.

இவரே வாழ்வின் ஆவியாக, அதாவது பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வை அளிப்பவராகத் திகழ்கின்றார். தூய ஆவியானவர் திருஅவையையும் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களையும் கோவிலாகக் கொண்டு குடியிருக்கின்றார்; அவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கின்றார்; முழுமையான உண்மையை நோக்கித் திருஅவையை வழி நடத்துகிறார்; ஒன்றிப்பாலும் பணியாலும் அதில் ஒற்றுமையை விளைவிக்கிறார்; இன்னும் பலதரப்பட்ட திருஅவை ஆட்சி சார்ந்த கொடைகளையும் அருட்கொடைகளையும் அதற்கு அளித்து அதனை வழிநடத்துகிறார்; தம் கனிகளால் அதற்கு அணிசெய்கிறார்; நற்செய்தியின் வல்லமையால் திருஅவை இளமைப் பொலிவோடு துலங்கச் செய்கிறார்; என்றும் அதற்கு மறுமலர்ச்சி தருகிறார்; அதன் மணமகனான கிறிஸ்துவுடன் முழுமையாய் ஒன்றிக்கத் திருஅவையை வழிநடத்திச் செல்கிறார்” என்று தூய ஆவியாரின் செயல்பாடுகள் பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் எடுத்தியம்புகின்றன.



நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால், அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (யோவா 16:1213) என்று ஏற்கனவே தூய ஆவியார் வருகையின் நோக்கம் பற்றி தொடக்க உரைக் கொடுத்துவிட்டார் இயேசு.

. கடந்த ஞாயிறு நற்செய்தியில், “என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்” (யோவா 14:26) என்கின்றார் இயேசு. எனவே, தூய ஆவியானவர் கற்றுத்தரும் செயல்களில் நீதிக்கான செயல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தன் சீடர்களுக்குப் போதனை செய்துகொண்டிருந்த குரு ஒருவர், ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இரண்டு ஓநாய்கள் வாழ்கின்றன. அவை எப்போதும் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டே இருக்கின்றன என்றார். உடனே எழுந்த சீடர் ஒருவர், “குருவே, அப்படியென்றால் இறுதியில் எந்த ஓநாய் சண்டையில் வெற்றியடையும்” என்று கேட்டார். அதற்கு குரு, “நீ எந்த ஓநாய்க்கு அதிக உணவூட்டி வளர்க்கிறாயோ அந்த ஓநாய்தான் இறுதியில் வெல்லும்” என்றார் குரு. நமது உள்ளங்களிலும் தூய ஆவிக்கும் தீய ஆவிக்குமான போராட்டம் இடைவிடாது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதாவது, வாழ்வா சாவா, நன்மையா தீமையா, ஒளியா இருளா, உயர்வா, தாழ்வா, நீதியா அநீதியா என மனிதர் தனது வாழ்க்கையில் போராடுகிற பொழுதெல்லாம் அவர் எடுக்கின்ற முடிவைப் பொறுத்தே அவரின் வாழ்வு மாறுபடுகிறது. குறிப்பாக நீதி, நேர்மை, உண்மை, சமத்துவம், உடன்பிறந்த உணர்வுநிலை என உயர்ந்த விழுமியங்கள் பக்கம் நிற்கவேண்டுமென்றால் அவர் கட்டாயம் தூய ஆவியானவரின் உடனிருப்பைத்தான் தேடவேண்டும். இவைகளன்றி, சுயநலம் கொண்டு இவ்வுலகப் பேரின்பங்களில் மூழ்கி வாழ நினைப்பவர்கள் தீய ஆவியின் பக்கம் நின்றுகொள்வர். உலகம் தொடங்கியதிலிருந்து இன்றுவரை இந்த இரண்டு ஆவிகளுக்கான போராட்டங்கள் என்பது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆக, தூய ஆவியாரின் பக்கம் நிற்பவர்கள் நீதிக்காகத் தங்கள் இன்னுயிரை இழப்பவர்களாகவும் தீய ஆவியின் பக்கம் நிற்பவர்கள் அவர்களின் உயிர்களைப் பறிக்கும் தீயவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர் என்பதே வரலாறு நமக்குச் சொல்லும் பாடம்.

பழைய ஏற்பட்டு நூல்களில் இறைவாக்கினர்கள் தூய ஆவியாரின் எழுச்சிப்பெற்று நீதிக்காகக் குரல்கொடுப்பதைக் காண முடிகிறது. அதிலும் குறிப்பாக, சிறிய இறைவாக்கினர்கள் மிகப்பெரும் துணிச்சலோடு உண்மையின் பக்கம் நின்றுகொண்டு நீதிக்காகக் குரல் எழுப்புகின்றனர்.

“வறியோரை நசுக்கி, நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழிக்கின்றவர்களே, இதைக் கேளுங்கள்; ‘நாம் தானியங்களை விற்பதற்கு அமாவாசை எப்பொழுது முடியும்? கோதுமையை நல்ல விலைக்கு விற்பதற்கு ஓய்வுநாள் எப்பொழுது முடிவுறும்? மரக்காலைச் சிறியதாக்கி, எடைக்கல்லைக் கனமாக்கி, கள்ளத் தராசினால் மோசடி செய்யலாம்; வெள்ளிக்காசுக்கு ஏழைகளையும் இரு காலணிக்கு வறியோரையும் வாங்கலாம்; கோதுமைப் பதர்களையும் விற்கலாம்’ என்று நீங்கள் திட்டமிடுகிறீர்கள் அல்லவா?’ ஆண்டவர் யாக்கோபின் பெருமைமீது ஆணையிட்டுக் கூறுகின்றார்: அவர்களுடைய இந்தச் செயல்களுள் ஒன்றையேனும் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன் (ஆமோ 8:47). அவ்வாறே முதியவர் இருவரின் தீய ஆசைக்கு இணங்காத சூசன்னா என்ற தெய்வபயம் நிறைந்த இளம்பெண்ணுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அவர் சாவுக்குத் தீர்ப்பிடப்பட்ட நிலையில் கடவுளை நோக்கி அபயக்குரல் எழுப்புகிறார். அப்போது, தானியேல் என்னும் இளைஞன் வழியாகக் கடவுள் அப்பெண்ணைக் காப்பாற்றி நீதியை நிலைநிறுத்துவதைப் பார்க்கிறோம். \ஆண்டவர் சூசன்னாவுடைய கூக்குரலுக்குச் செவிசாய்த்தார். கொல்லப்படுமாறு அவர் நடத்திச் செல்லப்பட்டபொழுது, தானியேல் என்னும் பெயருடைய இளைஞரிடம் தூய ஆவியைக் கடவுள் தூண்டிவிட்டார். தானியேல் உரத்த குரலில், “இவருடைய இரத்தப்பழியில் எனக்குப் பங்கில்லை” என்று கத்தினார். (தானி (இ) 2:44)

தொழுகைக் கூடத்தில் எசாயாவின் ஏட்டுச் சுருளை எடுத்து வாசிக்கத் தொடங்கிய நமதாண்டவர் இயேசு, “ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்” (லூக் 4:18) என்றுதான் தொடங்குகின்றார். ஆகவே, எங்கெல்லாம் அநீதி தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் ஆவியானவரின் நீதிக்கான குரலாக நாம் ஒலிக்கவேண்டும்.

அருட்தந்தை சூசை மாணிக்கம்...

## இறந்த மாணவனின் கண்...

மே மாதம் 31 ஆம் திகதி விபத்தில் மூளைச்சாவு அடைந்து உயிரிழந்தார். இவரது கண்தானத்தால் இரு இளைஞர்கள் மீண்டும் பார்வை பெற்றுள்ளனர். அநுராதபுரம் கிளையின் கண்தான சங்கத்தின் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம். எஸ்.சந்தன இது குறித்து கூறுகையில்:

"உயிரிழந்த மாணவனின் கண்களை தானம் செய்ய அவரது பெற்றோர் சம்மதம் தெரிவித்ததையடுத்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டோம். மாணவனின் இறுதிச் சடங்கிற்கு முன்பே இரண்டு இளைஞர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருவரும் பார்வை பெற்றனர்.

மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இவ்வாறு பார்வையை மீண்டும் பெற காத்திருக்கின்றனர். கண்களை தானம் செய்வது ஒரு உன்னதமான செயல்" என தெரிவித்தார்.

## ஒன்றிணைந்து செயற்பட...

கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தின் மேற்பார்வைக் குழுக்களை வலுப்படுத்துவதுடன், இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக, குறித்த பாராளுமன்ற குழுவை நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்ய விமானத்துக்கு விதித்த...

வணிக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அது குறித்த முறைப்பாட்டை நகர்த்தல் பத்திரம் ஊடாக நேற்று (06) விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சட்ட மா அதிபர் ஊடாக சிறப்பு வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து மேற்படி விமானத்திற்கு விதிக்கப்பட்ட தடை முடிவுக்கு வந்ததையடுத்து நேற்று ரஷ்யாவுக்கு திரும்பியது.

## இரண்டு தினங்களில் 4,500...

சமையல் எரிவாயு விநியோகம் நாளை முதல் மேற்கொள்ளப்படும் என்றும் மக்கள் எரிவாயு கொள்வனவிற்காக வரிசையில் நிற்க வேண்டாம் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்று முன்தினம் 3500 மெட்ரிக் தொன் லாப் கேஸ் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக லாப் கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க நாளை முதல் அவற்றை சந்தைக்கு விநியோகிக்க முடியும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

லாப் கேஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 6850 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## மக்களுக்கு மீண்டும்...

தெரிவித்துள்ளது. இலங்கை அவுஸ்திரேலியா கிரிக்கெட் தொடரின் ஆரம்பம் தொடர்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் செயலாளர் மொஹான் டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

செயலாளர் மேலும் உரையாற்றுகையில், இலங்கையில் அமெரிக்க டொலர் கையிருப்பு குறைவாக உள்ள வேளையில் அவுஸ்திரேலிய அணியின் இலங்கை விஜயம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பலமானதாக அமையும்.

எனவே, இந்த போட்டிக்கான அனுமதிச்சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் மக்களுக்காக செலவிடும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சிடம் ஒப்படைப்பதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## பால்மாவின் விலைகள்...

தெரிவித்துள்ளன. அண்மையில் இடம்பெற்ற வரி அதிகரிப்பினால் இவ்விலை அதிகரிப்பு இடம்பெறவுள்ளதாக அந்நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இறக்குமதி செய்யப்பட்ட 400 கிராம் பால்மா பக்கற் 1020 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பால் மா பக்கற் 2545 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சப்புகஸ்கந்தவிலிருந்து நேற்று...

தெரிவித்துள்ளது. இதன்படி, இன்று முதல் 800 மெட்ரிக் தொன் டீசல் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளது. எதிர்வரும் சில நாட்களில் இந்த தொகையை மேலும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## வேலைவாய்ப்பு பணியகத்தில்... 03ஆம் பக்கம்

வாய்ப்பு முகவர் நிலையங்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அரச சேவையில் இருப்பவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். அரசு ஊழியர்களின் பணிமூப்பு மற்றும் ஓய்வூதியம் பாதிக்கப்படாமல் வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## மூன்றில் ஒரு மடங்கு... 03ஆம் பக்கம்

இலங்கை மாவட்ட மட்ட பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் ஹரிச்சந்ர பத்மஸ்ரீ தெரிவித்தார்.

தொடர்ந்து இரண்டு வாரங்கள் இந்த நிலை நீடித்தால் பாடசாலை போக்குவரத்து சேவையை கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எரிபொருள் நெருக்கடி காரணமாக தனியார் பஸ் சேவை உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் எரிபொருள் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தனியார் பஸ் ஊழியர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கேட்டுக் கொண்டுள்ளார்.(ஸ)

## 21ஆவது திருத்த... 03ஆம் பக்கம்

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி முழு ஆதரவையும் வழங்கும். எனினும், 21 ஆவது திருத்தச்சட்ட மூலம் நிறைவேறுவது மொட்டு கட்சியின் கைகளில்தான் தங்கியுள்ளது. ஏனெனில் அக்கட்சிக்குதான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளது.

அதேவேளை, தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணத்தில் அரசியல் நாடகம் அரங்கேற்றப்படக் கூடாது. மக்களுக்கு நியாயமான முறையில் பங்கிடப்பட வேண்டும்.

சஜித் பிரேமதாச பிரதமர் ஆகி இருந்தால்கூட நான் அமைச்சு பதவியை ஏற்றிருக்கமாட்டேன். மக்கள் ஆணையுடன் அமையும் அரசியல்தான் அமைச்சு பதவியை ஏற்பேன். அதுவும் எமது மக்களுக்கு சேவை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

## பேலியகொட மீன்... 03ஆம் பக்கம்

கலந்துரையாடுவதற்கும் தீர்மானித்துள்ளார். சந்தைக்கான ஐஸ் விநியோகம் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டு, வியாபாரிகளுக்கு தேவையான ஐஸ் கட்டிகள் தரமானதாகவும் நியாயமானதாகவும் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்ததோடு, விற்பனை செய்யப்படுகின்ற கடலுணவுகள் அனைத்தும் நாரா நிறுவனத்தினால் பரிசோதிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார்.

## பௌத்த மதகுருமார்... 03ஆம் பக்கம்

இடங்களில் சர்வதேச பௌத்த கூட்டமைப்பின் அனுசரணையுடன் இந்திய மத்திய கலாசார அமைச்சகத்தின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதமர் நரேந்திர மோடியின் பங்கேற்பு சிறப்பானதொரு விடயமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்கு இடம்பெற்ற நிகழ்ச்சிகளில், துறவிகள், உயரதிகாரிகள் மற்றும் பௌத்த உலகத்துடன் தொடர்புடைய ஏராளமானோர் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொண்டாட்டங்கள் பொதுவாக புத்தரின் வாழ்க்கை, பிறப்பு, ஞானம் மற்றும் போதனைகளைச் சுற்றி உருவானது, உரைகள் இன்றைய உலகத்தின் நிலை மற்றும் அமைதி, நல்லிணக்கம் மற்றும் அமைதியை அடைய புத்தர் போதித்த எட்டு வழிகளை உலகம் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதிபலிக்கும் வகையில் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

புதுடில்லியில் உள்ள சர்வதேச பௌத்த கூட்டமைப்புக்கு சொந்தமான லும்பினியில் உள்ள இந்திய சர்வதேச புத்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மையத்தை நிர்மாணிப்பதற்கான 'ஷிலான்யாஸ்' விழாவில் பிரதமர் மோடி மற்றும் பிரதமர் டியூபாவுடன் கலந்து கொண்டனர்.

இதே வேளை நான்கு நிகாயாக்களின் பிரதம பீடாதிபதிகளான ஸ்ரீ அமரபுர மகா நிகாயா அதி வணக்கத்திற்குரிய அக் மகா பண்டித கலாநிதி தொடம்பஹல சந்திரசிறி மகா தேரர், சியாம் மஹா நிகாயாவின் மல்வத்தை பிரிவின் பிரதி பீடாதிபதி வணக்கத்துக்குரிய திம்புல்குபுரே விமலதர்ம மகா தேரர், அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி வெண்டுருவே உபாலி அனுநாயக்க தேரர் மற்றும் ஸ்ரீ ராமஞ்ஞ மகா நிகாயாவின் வணக்கத்திற்குரிய அக்க மஹா பண்டித மகுலேவே விமல மகாநாயக்க தேரர் ஆகியோர் விடுத்துள்ள செய்தியில், நெருக்கடி மிக்க சூழலில் உலகம் முழுவதும் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர அன்பிற்கு ஆசீர்வாதங்களைத் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு மீண்டும் உதவ...

வீரகோன் பங்களாதேஷ் பிரதமரை கணபாபனில் மரியாதையின் நிமித்தம் சந்தித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு இந்த தொற்றுநோய் தான் காரணம் என்று கூறிய வீரகோன், பங்களாதேஷ் அளித்து வரும் ஆதரவை பாராட்டினார். அரிசி உற்பத்தி 50% குறைந்துள்ளதால் இலங்கைக்கு தற்போது உரம் தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், பங்களாதேஷ் பாரிய சனத்தொகையைக் கொண்ட நாடாக இருந்தாலும், இந்த நெருக்கடியின் போது இலங்கைக்கு உருளைக்கிழங்கு வழங்கலாம் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் உக்ரைன்ரஷ்யா போரைத் தொடர்ந்து உலகளாவிய உணவுப் பிரச்சினைக்கு மத்தியில் அதிக உணவுகளை வளர்க்க பங்களாதேஷ் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

பங்களாதேஷ் ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு உப்பு மற்றும் வறட்சியைத் தாங்கும் அரிசி வகைகளை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்என்றும்ஷேக் ஹசீனா கூறினார்.

## 02 வருட ஒத்திவைக்கப்பட்ட...

ரணதுங்கவுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையை கொழும்பு மேல் திமன்றம் விதித்துள்ளது. அதற்கிணங்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரட்ன தீர்ப்பளித்தார்.

அத்துடன் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வுக்கு 25 மில்லியன் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். மீதொட்டமுல்ல பிரதேசத்தில் காணி கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கிலேயே அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

காணி உறுதிப் பத்திரத்தில் கையொப்பம் பெற்ற குற்றச்சாட்டில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றவாளி என நீதிபதி தீர்ப்பளித்தார். 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 2ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மீதொட்டமுல்ல பிரதேசத்திலுள்ள காணியில் வசித்த சட்டபூர்வமற்ற குடியிருப்பாளர்களை வெளியேற்றி காணியை புனரமைத்து தரும் பணிகளை மேற்கொள்வதற்காக வர்த்தகரான ஜெராட் மெண்டிஸ் என்பவரிடம் 64 மில்லியன் ரூபாவை கப்பமாக கோரிய குற்றச்சாட்டின் பேரிலேயே முன்னாள் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றவாளி தாக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அமைச்சர், அவரது மனைவி மற்றும் நரேஷ் பாரிக் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கில் மூன்றாவது குற்றவாளியான நரேஷ் பாரிக் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். அவர் இன்றியே நீதிமன்றம் வழக்கை தொடர தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## சமூக ஊடகங்களை முடக்க அரசு...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். களுத்துறை மாவட்டத்தின் சமூக ஊடக செயற்பாட்டாளர்களுடன் ஞாயிற்றுக்கிழமை (5) நடைபெற்ற சந்திப்பின் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில் ,

வரி அறவீடுகள் மூலம் சமூக வலைத்தள ஊடகங்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக சமூக வலைத்தள பாவனையை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 'கோட்டா கோ ஹோம்' உள்ளிட்டவற்றின் குரலை முடக்கியதைப் போன்று சமூக வலைத்தளங்களின் குரல்களையும் முடக்குவதற்கான நடவடிக்கையே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் களைப்படைந்து விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம். இவை குறுகிய காலத்திற்கே. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றும் நாள் வெகுதொலைவில் இல்லை. இரு வருடங்களாக ராஜபக்ஷ சாபத்தின் அவல நிலைமையை அனுபவித்து வருகின்றோம். பெண்களின் சுகாதார நலன் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது எம்மை விமர்சித்தனர். இன்று கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் மந்த போசணை அதிகரித்து வருகிறது. இரசாய உரத்தை தடை செய்து , விவசாயத்தை முழுமையாக சீரழித்து விட்டு , தற்போது விவசாயத்தில் ஈடுபடுமாறு கோருகின்றனர். உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விவசாயத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது என்றார்.

## SLPP எம்.பிமார் சிலர்...

உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை கேட்டுக் கொண்டுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் விசேட சந்திப்பொன்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. அதன்போதே அவர்கள் பிரதமரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளனர். நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்படாமல் அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வருவதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பில் அவர்கள் தமது அதிருப்தியை பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் நாட்டு மக்கள் அரசியல மைப்பையன்றி அத்தியாவசிய உணவுப்பொருட்கள், உரம், மருந்துப் பொருட்கள் போன்றவற்றையே அரசாங்கத்திடம் கேட்கின்றனர். அது தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி சந்திப்பில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ச,பவித்ரா வன்னியாரச்சி, ரோஹித அபேகுணவர்தன, விமலவீர திஸாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஸ)

## கச்சதீவை விட்டுக் கொடுக்க...

ஏற்றுக்கொள்ள முடியாது என அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியாவிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த சூழ்நிலையில் எமது தொப்புள்கொடி உறவான தமிழ்நாடு அரசு எமக்கு உதவி செய்வதுபோல் உதவி செய்து உதவி பொருட்களை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டு அந்த சந்தர்ப்பத்தில் கச்சத்தீவு பிரச்சினையை ஒரு முக்கியமாக எடுத்துக் கொண்டு இருப்பது கோபத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

## ஜோன்ஸ்டனை தேடும் பணிகள்...

தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இன்னும் கைது செய்யவில்லை.

முன்னாள் அமைச்சரைக் கண்டுபிடிப்பதற்காக பல பொலிஸ் குழுக்கள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவா தெரிவித்தார். இந்த சம்பவங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட நால்வர் சந்தேகநபர்களாக கடந்த வாரம் சட்டமா அதிபர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார்.

## லாஃப்ஸ் நிறுவனம்

வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று (06) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

லாஃப் எரிவாயு நிறுவனம் 12. 5 கிலோ கிராம் எடை கொண்ட லாப் எரிவாயு சிலிண்டரின் விலையை 6850 ரூபாவாகவும் 5 கிலோ கிராம் எடை கொண்ட லாப் எரிவாயு சிலிண்டரின் விலை 2740 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் குறித்து விசாரிப்பதற்காக லாஃப்ஸ் நிறுவனத்தை அழைக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவித்த அவர், எரிவாயு விலையை உயர்த்துவதற்கு முன்னர் நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தேவைக்கு மேலதிகமாக உ ணவுப்பொருட்களையும் எரிபொரு ட்களையும் சேமித்து வைக்கக் கூடாது எனவும், நுகர்வோர் இவ்வாறு தேவையற்ற சேகரிப்புகளை மேற்கொண்டால் அது சந்தையின் இயல்பு நிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையுடன் மக்கள் பொருட்களை சேமிக்க முற்படுவதாகவும் இதனால் எதிர்வரும் நாட்களில் சிக்கல் நிலை உருவாகலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

பல மாதங்களாக சந்தையில் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவில்லை. நிர்வாகப் பிரச்சினை மற்றும் டொலர் நெருக்கடி காரணமாக இந்த நிலை உருவானதோடு நேற்று முன்தினம் முதல் கேஸ் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனுடன் இணைந்ததாக அவற்றின் விலைகளையும் லாஃப்ஸ் அதிகரித்தது.

லாப் கேஸ் விலைகள் 4860 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் நிலையில் அதனை விட அதிக விலைக்கு லாஃப் கேஸ் விற்கப்படுவது குறித்து பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளதோடு சிலர் முறைப்பாடும் செய்துள்ளனர். சந்தையில் லாப் கேஸ் சிலிண்டர்களே கூடுதலாக விநியோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (பா)

## சவாலான நேரத்தில் வழங்கிய...

விளக்கமளித்தார். இருதரப்பு ஈடுபாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்கள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.குறிப்பாக இலங்கைக்கு சவாலான நேரத்தில் இந்தியா வழங்கிய தாராளமான மற்றும் தொடர்ச்சியான உதவிகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நன்றிகளைத் தெரிவித்தார். உணவு, எரிசக்தி பாதுகாப்பு, மருந்துப் பொருட்கள் வழங்குதல், கடன் மற்றும் எஸ்.டப்ளிவ்.ஏ.பி. ஏற்பாடுகள் ஆகியவற்றின் மூலமான குறிப்பிடத்தக்க ஆதரவு போன்ற அனைத்து துறைகளிலும் நல்கப்பட்ட மகத்தான அளவிலான இந்திய உதவிகளை இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கை அரசாங்கம் ஆழமாக பாராட்டுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.பல்லாண்டுகளாக நெருங்கிய அண்டை நாடுகளாகத் திகழும் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளின் முக்கிய முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் பாராட்டினர்.

இந்த சந்திப்பின் போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் இணைந்திருந்தனர்.

## எம்.பிமாருக்கு புதிதாக...

சமர்ப்பித்துள்ளார். அமைச்சரவைப் பத்திரத்தின்படி, பன்னிபிட்டியவிலுள்ள "வியத்புர" வீடமைப்புத் திட்டத்தில் இருந்து இவ்வாறு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இந்த வீடுகளுக்காக சுமார் 1795 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாதிவெல பிரதேசத்தில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதி பாழடைந்து வரும் நிலையில், அந்த வீடுகளுக்கு போதிய இடவசதி இல்லையெனவும் அதற்கு மாற்றமாக இந்த வீட்டுத் தொகுதிகளை வழங்க அமைச்சரவைப் பத்திரம் பரிந்துரைக்கிறது.

மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மையால் வீடுகள் சேதமடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிக நடவடிக்கையாக முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை ஒதுக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டம் செய்யும் இளைஞர்களை...

வெளியேற வேண்டும்' என என்டீரிவிக்கு அளித்துள்ள பேட்டியில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு பொருளாதாரத்தை தவறான முறையில் கையாண்டமையே காரணம் என இந்திய ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் உதவிகளிற்காக நன்றி தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைக்கு கொவிட் காரணமில்லை. பல நாடுகள் கொவிட்டின் பின்னர் மீண்டும் முன்னேற்ற பாதையில் பயணிக்கின்றன என தெரிவித்துள்ள பிரதமர், பொருளாதாரத்தை தவறாக கையாண்டமையே இந்த நிலைக்கு காரணம் என குறிப்பிட்டுள்ளார். 2019 இல் பிரதமர் பதவியை இழந்தது முதல் நான் நாட்டின் பொருளாதாரம் குறித்து ஆய்வு செய்து வருகின்றேன். தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை தவிர வேறு வழியில்லை எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் சிறந்த விதத்தில் இடம்பெறுகின்றன என என்டிரீவிக்கு தெரிவித்துள்ள பிரதமர், மக்கள் ஐக்கியத்துடன் செயற்படுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். நாங்கள் பொருளாதார அரசியல் நெருக்கடியிலிருந்து இணைந்து மீள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை அரசியல் கட்டமைப்பிற்குள் உள்வாங்க எண்ணியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதற்கு தயார் என்றால் அவர்கள் அந்த நடைமுறையில் இணைந்து கொள்ளலாம். அதன் மூலம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற பதற்றத்தை சிறிது குறைக்க முடியும். எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் உள்ளே வரவேண்டும் அல்லது வெளியேற வேண்டும் என தெரிவித்துள்ள பிரதமர், ஆர்ப்பாட்டக்காரர்கள் சில அரசியல் மாற்றங்களை கொண்டு வந்துள்ளனர் என்பதை பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து வைப்பது கைதுசெய்வது போன்ற நடவடிக்கைகள் குறித்து பதிலளித்துள்ள பிரதமர் ரணில், நீதிபதிகளை அடிப்படையாக வைத்தே கைதுகள் இடம்பெறுகின்றன. சமீபத்தைய வன்முறைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## பாராளுமன்றத்தில் பிரதமர்...

அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளைகள் இன்றைய தின விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

## மைத்திரி, பாதுகாப்பு பிரதானிகளின்...

தொலைபேசி அழைப்புகளை பரிமாறிக் கொள்வதைத் தவிர அவர்களில் எவரும் தமது கடமைகளைச் சரியாகச் செய்யத் தவறியதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்த போதிலும் ஈஸ்டர் தாக்குதலைத் தடுக்க முன்னாள் பொலிஸ் மா அதிபர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அதிகாரிகள் தவறியதால் தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாக அறிவிக்கக் கோரி 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நேற்று ஆராயப்பட்டது. கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சமில் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்றது.

முக்கியமான கத்தோலிக்க தேவாலயங்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக ராஜதந்திர மட்டத்தில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவர் நிலாந்த ஜயவர்தன ஒப்புக்கொண்டுள்ளார். அதை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தாக்குதல் நடத்தப்படுவதாக கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி வலுவான தகவல் கிடைத்த போதிலும், அதனைத் தடுக்கவோ அல்லது உரிய நடவடிக்கை எடுக்கவோ அரச புலனாய்வுப் பிரிவில் தவறிவிட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார்.

# 'பயிரிடுவோம், உயிர்வாழ்வோம்' திட்டம் வலி. கிழக்கில் ஆரம்பம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**



சமூக விஞ்ஞான ஆய்வு மையமும் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளரும் இணைந்து "பயிரிடுவோம், உயிர்வாழ்வோம்" எனும் திட்டத்தை வலி கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட உரும்பிராய் கிழக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைத்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஏற்படக் கூடிய உணவு பஞ்சத்தை தடுக்கும் முகமாக வீடுகளில் தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக மரவள்ளி தடிகள், மற்றும் விதைதானியங்கள் என்பன ஒவ்வொருவரது வீடுகளிலும் நாட்டி வைக்கப்பட்டதுடன் வீட்டுத் தோட்டம் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கி வைக்கப்பட்டன. உரும்பிராய் கிழக்கு காளி கோவிலில் வலி கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஸ் தலைமையில் ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநர் அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம், துணை இயக்குநர் மருத்துவர் க.பவணந்தி மற்றும் சமூக விஞ்ஞான ஆய்வு மைய செயற்பாட்டாளர்களான ஆசிரியர்கள் பகீரதன், திருமதி கௌரி, கசேந்திரன், சமூக செயற்பாட்டாளர் திருமதி வந்தனா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# வட்டுவாகல் பாலத்தில் வீதி சமிக்ஞை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை



**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் பயணம் செய்பவர்கள் பாலத்திற்கு அருகாமையில் வீதி சமிக்ஞை இல்லாததால் போக்குவரத்தில் பெரும் சிரமத்தினை எதிர்கொள்கின்றார்கள்.

பரந்தன் – முல்லைத்தீவு வீதியில் வட்டுவாகலில் அமைந்துள்ள இந்த ஒடுக்கமான பாலத்தில் ஒரு வேளையில் பெரிய வாகனம் ஒன்றே பயணம் செய்ய முடியும். ஏனைய வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு குறித்த வாகனம் பாலத்தை கடந்த பிறகே பயணத்தை தொடர முடியும்.

இதனால் நேரமும் எரிபொருளும் வீண்விரயமாகின்றன.ஆகவே இவ் பாலத்தின் இரு பகுதிகளிலும் வீதி சமிக்ஞைகளை அமைத்து தருமாறு மக்கள் கோரியுள்ளனர்.

# சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் தீயில் எரிந்து நாசம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் நேற்று முன்தினம்(05) இரவு ஏற்பட்ட தீப்பரவலில் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய மின் உற்பத்தி உபகரணங்கள் எரிந்து சேதமடைந்தன.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையத்திலேயே திடீரென்று இவ்வாறு தீப்பற்றியது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா நகரசபை தீயணைப்பு படையினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும் புதிதாக பொருத்துவதற்கென வைக்கப்பட்டிருந்த சூரிய மின் கலங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதன்போது தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பொலிசார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# கிளிநொச்சியில் தமிழக நிவாரண பொதிகள் இந்திய துணைத்தூதுவரால் வழங்கி வைப்பு

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சிக்கு நேற்று (06) விஜயம் செய்த இந்திய துணைத்தூதுவர் தமிழக,இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரண பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் ஜெயபாஸ்கரன் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவு பொதிகளை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அரசு திணைக்களத்தின் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் அண்மையில் தமிழக அரசு அத்தியாவசிய நிவாரண பொருட்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது. அந்த வகையில் இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்திற்கு 4450 பொதிகளில் அரிசியும் 50 பொதிகளில் 1 கிலோ நிறையுடைய 750 பால்மா பைக்கற்றுக்களும் கிடைக்கப்பெற்று கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 10,900 பயனாளிகளுக்கும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 3720 பயனாளிகளுக்கும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 3380 பயனாளிகளுக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 2000 பயனாளிகளுக்குமாக மொத்தமாக 20,000 பயனாளிகளுக்கு இவ் நிவாரண பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.



# வடக்கு, கிழக்கு விவசாயிகளுக்கு உரம் கிடைக்க உதவுங்கள்

## இந்திய தூதுவருக்கு செல்வம் எம்.பி கடிதம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**



வடக்கு, கிழக்கு பகுதி விவசாயிகளுக்கு தகுந்த காலத்தில் விவசாயத்துக்கான உரம் கிடைக்காமையால் இப் பகுதி விவசாயிகள் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றார்கள் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானியருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கு அனுப்பியுள்ள மடலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு, கிழக்கில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர்.அவர்கள் தற்பொழுது நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ் விவசாயிகளுக்கு தரமான உரங்கள் தகுந்த நேரத்தில் கிடைக்காததால் இவர்களின் விவசாயம் மற்றும் இவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் தோன்றியுள்ளது.

ஆகவே தாங்கள் இந்திய பிரதமருடன் இதுவிடயமாக கலந்தாலோசித்து இது குறித்து தீர்க்கமான ஒரு முடிவை மேற்கொள்ளுமாறு இலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பாக தங்களை மிக பணிவாக வேண்டி நிற்கின்றேன் என தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# புங்குடுதீவில் ஆயுர்வேத வைத்தியசாலை அங்குரார்ப்பணம்

**கரவெட்டி தினகரன், வேலணை குறூப் நிருபர்கள்**

வேலணை புங்குடுதீவு பிரதேசத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வேலணை பிரதேச சபையின் தவிசாளர் கருணாகர குருமூர்த்தி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி உதவி திட்டத்தினூடாக சுமார் 16 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருந்த நிலையில் இந்த திட்டம் நடைறைப்படுத்தப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. இதன்போது தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி கருத்துரைக்கையில்,

தற்போதைய நாட்டு சூழலும் பொருளாதார நெருக்கடியும் மக்களை பெரிதும் பாதித்துள்ளது. இதில் மருத்துவம் சார் தேவைகளும் அதிகரித்துள்ளமையால் மக்கள் பெரும் பாதிப்புகளை நாளாந்தம் எதிர்கொண்டு வரும் நிலை காணப்படுகின்றது.

எமது பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியான புங்குடுதிவில் இந்த வைத்தியசாலையை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேச அபிவிருத்தி உதவி திட்டத்தினூடாக 16 இலட்சம் ரூபா நிதி இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

இப்பகுதி மக்களின் ஆயுர்வேத மருத்துவத்தை அதிகளவில் எதிர்பார்க்கும் முதியோரின் அபிலாசைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும் ஏனையவர்களின் நலன்களை முன்னிறுத்தியும் இந்த வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

புங்குடுதீவு பகுதியானது பரந்தளவிலான பகுதியாகவும் பல கிராமங்களை உள்ளடக்கியதாகவும் இருப்பதால் மக்கள் தமது மருத்துவ தேவையை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளும் நிலையும் குறைவாகவே காணப்படுகின்றது.

இதனால் மாதாந்தம் 15 நாட்களுக்கு ஒரு தடவை நடமாடும் சேவையை பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் மக்கள் நலன்பெறும் வகையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் தவிசாளரால் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாக பொங்கல் விழா ஆரம்பம்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி விசாக பொங்கலின் தொடக்க நிகழ்வான கடல் நீரில் விளக்கெரியும் அற்புத காட்சிக்காக கடல் நீரில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு நேற்று (06) நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் கரையிலுள்ள வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வைகாசி விசாகப் பொங்கலினை முன்னிட்டான ஆரம்ப நிகழ்வான பாக்கு தெண்டல் பாரம்பரிய முறைப்படி கடந்த மாதம் 30ம் திகதி முள்ளியவளை காட்டுவிநாயகப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்றது. மரபு வழிவந்த நிகழ்வுகளாக அடியவர்களால் கொண்டாடப்பட்டு வரும் கடல் நீரில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு பாரம்பரிய முறைப்படி முள்ளிவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் இருந்து முல்லைத்தீவு தீர்த்தக்கரைக்கு சென்று அங்கு கடல் நீரில் தீர்த்தம் எடுத்து வந்து ஏழுநாட்கள் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் அம்மன் சன்னிதியில் உப்பு நீரில் விளக்கெரியும் அற்புத காட்சி இடம்பெறும்.

எதிர்வரும் 12.06.2022 அன்று காட்டு விநாயகர் ஆலயத்தின் பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும். அதனை தொடர்ந்து 13ம் திகதி திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வைகாசி விசாக பொங்கல் நிகழ்வு நடைபெறும். இதன்போது காட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து தீர்த்தம் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பொங்கல் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறாத நிலையில் பக்தர்கள் நேர்த்திக்கடன்களை செய்து நிறைவேற்ற முடியாத நிலை காணப்பட்டது. இந்நிலையில் இந்த ஆண்டு பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெறவுள்ளதுடன் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகைதரவுள்ளனர்.

பெண் மீதான வாள்வெட்டு சம்பவம்:

# இரு ஆண்டுகளின் பின் சந்தேக நபர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

மிருசுவிலில் பெண் ஒருவரை வாளினால் வெட்டிக் காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் 2 ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வழங்கப்பட்ட பணத்துக்காக அந்தப் பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சாவகச்சேரியைச் சேர்ந்த 26 வயதுடையவரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். மேதிகமாக யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் 2 ஆண்டுகளின் பின்னர் முதன்மை சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து கைத்தொலைபேசி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் வெளிநாட்டிலிருந்து வழங்கப்பட்ட பணம் மற்றும் அறிவுறுத்தலில் இந்த தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை, ஒட்டுசுட்டான் மற்றும் பாலாவி பகுதிகளில் 3 மாதங்களுக்கு முன் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களுடனும் சந்தேக நபருக்கு தொடர்புள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வறிய மக்களுக்கு உதவ முடியாத உள்ளூராட்சி சபைகளை கலைத்து விடுவதே சிறந்தது

## சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



இக்கட்டான நிலைமையில் கூட வறிய மக்களுக்கு உதவ முடியாத உள்ளூராட்சி சபைகளை கட்டிப் பாதுகாப்பதனை விட அவற்றை கலைத்து விடுவது சிறப்பான விடயமாக அமையும் என சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

தேவையற்ற ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலையில் அனைவரும் காணப்படுகிறோம்.கடந்த வருடம் நாட்டில் உர இறக்குமதிக்கு தடை விதித்த போது பாதிக்கப்பட்ட விவசாயிகள் வீதிக்கு இறக்கினார்கள். அதை ஏனையவர்கள் வேடிக்கை பார்த்தார்களே தவிர எவரும் விவசாயிகளுக்கு கை கொடுக்க முன்வரவில்லை. ஆனால் அன்று விவசாயிக்கு கை கொடுக்காத பலரும் இன்று பல விதமான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அரச உத்தியோகத்தர்கள் எதைப் பற்றியும் சிந்திக்காதவர்களாக உள்ளனர்.நாட்டில் இடம்பெறுகின்ற பிரச்சனைகளை வேறு யாருடையதோ பிரச்சினையாகவே அவர்கள் இன்றும் பார்க்கின்றனர்.

அரசு சம்பளம் வழங்க பணத்தை அச்சிடுகிறது. பணம் அச்சிடுவது பணவீக்கத்தை வெகுவாக அதிகரிக்கும். ரூபாவின் பெறுமதியைக் குறைக்கும். மக்களுக்காக வீதிக்கு இறங்கி இருக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அவர்களது சம்பளம் நிறுத்தப்படும் போதே வீதிக்கு இறங்குவார்கள். அப்போது நாட்டில் எதுவுமே இருக்காது. நாட்டை கட்டியெழுப்ப ஒரு தலைமைத்துவம் இருக்காது.தலைவன் இல்லாத குடும்பம் எவ்வாறு சீரழியுமோ அதே நிலை நாட்டிற்கு ஏற்படும்.

புதிய தலைமைத்துவத்தை தேடும் நிலை உருவாகும்.அத்தோடு இந்தியா,சீனா போன்ற அண்டை நாடுகளால் அரவணைக்கப்படும் ஆபத்தான நிலைமையும் காணப்படுகிறது.

அண்டை நாடுகளின் மாநிலமாகக் கூட உருவாகும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகிறது.இந்த இக்கட்டான தருணத்தில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். உணவுக்கு போராடும் மக்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதனை விட வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளூராட்சி சபைகள் உள்ளன. இவ்வாறான மக்களுக்கு உதவ முடியாத சபைகளை கட்டிப் பாதுகாப்பதனை விட கலைத்து விடுவது சிறந்தது என நான் கருதுகிறேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# வரணியில் வீதி விபத்து: இருவர் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி வீதியில் ஞாயிற்றுக்கிழமை (05) இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வரணி வீதி ஊடாக சைக்கிளில் பயணித்த முதியவரை அவ் வழியே சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் சைக்கிளில் பயணித்த கரம்பைக்குறிச்சி வரணி பகுதியைச் சேர்ந்த 68வயதான ஒருவரும்,மோட்டார்சைக்கிளில் சென்ற நாகர்கோவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 23வயதான ஒருவருமே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்தனர்.

# கிழக்கின் குரல்



# அனைத்து வேறுபாடுகளையும் மறந்து மக்களின் துயர்போக்கும் தருணத்துக்காக இணைவது அவசியம்

த.ம.வி.பு செயலாளர் பிரசாந்தன்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

உணவுத் தேவைக்காக மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமை ஏற்படாமல் தடுத்து, அவர்களை பாதுகாப்பதே உடனடித் தேவையாக உள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான மாதாந்த விஷேட கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை(06) நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எரிவாயு, எரிபொருள், அடிப்படை பாவனைப் பொருட்கள் என அனைத்து விதமான பொருட்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் செய்வதை விடுத்து, மக்களுக்கான சேவைகளை வழங்க அனைவரும் முன்வர வேண்டும். அரசியல் தலைவர்களை மக்கள் தெரிவு செய்வது தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுத்தருவதற்கே. மாறாக தங்களது அரசியல் ஆசனங்களை சூடாக்கிக்கொண்டு மக்களை குழப்பி அதில் குளிர்காய்வதற்காக அல்ல.

ஆனால், இன்று சில அரசியல் தலைவர்கள் தங்களது நிலைமையை மறந்து தாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதையும் மறந்து வெறும் அரசியல் வார்த்தைகளை மாத்திரம் பயன்படுத்தி மக்களை சூடாக்கின்றனர். இதில்,மக்கள் ஏமாறக் கூடாது.

எரிவாயு பற்றாக்குறையால் சமைக்க முடியாமல் தத்தளித்த மக்கள், சிலிண்டரை பெறுவதற்காக வரிசையில் நிற்கின்றனர். அவ்விடத்திற்குச் சென்று அவர்களை குழப்பி தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அலுவலகத்திற்கு அல்லது பிரதி அமைச்சர் வியாளேந்திரனின் அலுவலகத்திற்குச் சென்றால் கேஸ் கிடைக்கும் என்கின்றனர். அரசாங்க அதிபரிடம் முறையிடுவதற்கோ அல்லது பிரதேச செயலாளரிடம் முறையிடுவதற்கோ, மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்ய வேண்டிய தேவைப்பாடு இல்லை. சாதாரண கிராமச்சங்க தலைவர் கூட இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் . அதிகாரத்தை பயன்படுத்தி, தங்களால் முடிந்தால் மக்களுக்கு எரிவாயு பெற்றுக்கொடுக்க வேண்டும். அல்லது மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான நியாயமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மாறாக மக்களை ஏமாற்றி அரசியல் செய்கின்ற செயற்பாடுகளை முற்று முழுதாக தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இது அரசியல் செய்கின்ற தருணமுமல்ல. மக்கள் அன்றாட தேவைக்காக கையேந்தி நின்ற நிலைமையினை ஏற்படுத்தாமல் அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடுபடுவதே சிறந்தது. பயன்படுத்தப்படாமலுள்ள காணிகளை பயன்படுத்தி, தானிய உற்பத்திகளை எவ்வாறு அதிகரிக்கலாம் குறுங்கால பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பது எப்படி, வீட்டுத்தோட்டங்களை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

அரசியல் கொள்கைகள், இன மத வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஒன்றித்து மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் தருணமாகவே இந்த சூழலை பார்க்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

## கண்ணகி புகழ்பாடுவோம் இறுவட்டு வெளியீடு



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பில், புகழ்பெற்ற தாண்டவன்வெளி குளக்கட்டு கண்ணகியம்மன் ஆலய அலங்கார திருச்சடங்கு உற்சவம், கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இவ்வுற்சவம், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (14) திருக்குளிர்த்தி பாடி நிறைவுபெறவுள்ளது.

பூம்புகார், ஏரன்ஸ் வீதி, வாழ் மக்களால் இரண்டாம் நாள் சடங்கு உற்சவத்தை சிறப்பிக்கும் முகமாக சனிக்கிழமை(04) இரவு பூசைகள் இடம்பெற்றன. இதன்போது, குழந்தையடி பிள்ளையார் ஆலய கட்டட நிதிக்காக மங்கையற்கரசி குடும்பத்தினரின் அனுசரணையில், கண்ணகை புகழ் பாடுவோம் எனும் பக்தி பாடல் அடங்கிய இறுவட்டும் வெளியீடு செய்யப்பட்டது.

இவ்விறுவட்டு வெளியீட்டு விழாவில், ஆலய பிரதம குரு சிதம்பரசாந்தரூபக் குருக்கள், ஆலய பிரதம பூசகர் சித்திரவேல் ஐயா மற்றும் ஆலய நிருவாகத்தினர், மங்கையற்கரசி அம்மையாரின் குடும்ப சந்ததியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கண்ணகி அம்பாள் ஆலய தீ மிதிப்பு உற்சவம் எதிர்வரும் (12) ஞாயிற்றுக்கிழமை தாண்டவன்வெளி வாழ் மக்களின் பத்தாம் நாள் சடங்கு உற்சவ தினத்தன்று இடம்பெறும்.

## ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக நியமனம்

(கல்லடி குறூப்நிருபர்)



ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக தாழங்குடாவைச்சேர்ந்த பிரபல ஆசிரியரும் முன்னாள் அதிபருமான பிரான்சிஸ் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி முகாமைத்துவ குழுவின் பரிந்துரையின் பேரில், கட்சியின் செயற்குழுவின் அங்கீகாரத்துடன் நேற்றுமுன்தினம் (05) எதிர்க்கட்சி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டது.எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ கடிதத்தை கையளித்தார்.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளர் மத்துமபண்டார உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.கடந்த பாராளுமன்ற தேர்தலில் இவர், ஐக்கிய மக்கள் சக்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகளவிலான வாக்குகளை பெற்றிருந்தார்.

## அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உரமூடைகளைத் திருடும் கும்பல்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உரமூடைகளை திருடும் சம்பவங்கள், அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும் இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் தொழிற்படுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில்,யூரியா உள்ளிட்ட உரமூடைகளை திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக, அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடு மற்றும் வீட்டுச் சூழலில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் உரமூடைகளே சூட்சுமமான முறையில் திருடப்படுகின்றன. இரவு, பகல் பாராது இத்திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இதேவேளை, பெற்றோல் மற்றும் டீசல் எரிபொருள் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளது. உரம் மற்றும் எரிபொருள் விலையேற்றத்தையடுத்து, இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்று வருகின்றன.வீடு மற்றும் நெற்காணிப் பிரதேசங்களில் நிறுத்தி வைக்கப்படும்வாகனங்களிலுள்ள எரிபொருளை உறிஞ்சி, கொள்கலன்களில் எடுத்துச் செல்லுதல்,

மின்சார பற்றரிகளை கழற்றிச் செல்லுதல் போன்ற திருட்டுக்களும் தற்காலத்தில் அதிகரித்துள்ளன. இதனால், சகலரையும் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

### போக்குவரத்து சீரின்மையால்

## கந்தளாய் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை வீழ்ச்சி

(கந்தளாய் தினகரன் நிருபர்)

நாடு முழுவதும் நேற்று (06) பாடசாலைகள் ஆரம்பமான தையடுத்து, கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளிலும் மாணவர்கள் உற்சாகத் துடன் பாடசாலைக்குச் சென்றனர்.

நீண்ட விடுமுறையின் பின்னர் நாட்டின் பொருளாதார பின்னடைவுகளின் பிற்பாடு முதலாம் தவணைக்காக நேற்று பாடசாலைகள் ஆரம்பமாகின.

உற்சாகத்துடன் மாணவர்கள் வருகை தந்த போதிலும், வருகை சற்று குறைவாக இருந்ததாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் சில தனியார் பஸ்கள் நேற்று கந்தளாயில் சேவைகளில் ஈடுபடவில்லை. இதனால்,மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.இந்நிலையில்,நாட்டின் சகல பகுதிகளிலும்,தூர இடங்களிலிருந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருந்தன. தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெற்றதாலே இந்நிலைமைகள் ஏற்பட்டன.

## வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வலது குறைந்தோருக்கு சக்கர நாற்காலிகள்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வலது குறைந்தோருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. அல்ஹிக்மா பவுண்டேசன் இவற்றை, வழங்கியது.

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிரின் ஏற்பாட்டில், சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு கந்தளாய் நடுஜும்ஆ (04)பள்ளிவாசலில் நடைபெற்றது. இதன்போது, பேராறு பகுதியிலுள்ள பத்து பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில், அல்ஹிக்மா பவுண்டேசன் அமைப்பின் பணிப்பாளர் எம்.ஏ.இபாதத்துல்லாஹ் (மௌலவி), கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ,சி, எம்.ஜவாஹிர், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் வலது குறைந்தோரும் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருது தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய பாடநெறிகள் அங்குரார்ப்பணம்

(கல்முனை விஷேட நிருபர்)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாய்ந்தமருது தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய கல்வி ஆண்டுக்கான பாட நெறிகள் நேற்று திங்கட்கிழமை (06) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நிலைய பொறுப்பதிகாரி எம்.ரி.எம்.ஹாரூன் தலைமையில் இடம்பெற்ற இவ்வங்குரார்ப்பண நிகழ்வில்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எம்.தியாகராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதில்,குறித்த பாட நெறிகளுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. காலத்தை வீணடிக்காமல் உரிய காலப்பகுதிக்குள் அவரவர் இணைந்துள்ள பாட நெறியை மிகவும் ஆர்வத்துடன் சிறப்பாக பூர்த்தி செய்து, சான்றிதழைப் பெறுவதில் முனைப்புக்காட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடி நிறைந்த இக்காலகட்டத்தில் இப்பயிற்சி நெறிககளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து, தொழிற் தகைமையை பெற்றுக் கொள்வதூடாக உள்நாடு, வெளிநாட்டுத்தொழிற் சந்தைகளில் நல்ல வருமானத்தை ஈட்டக் கூடிய தொழில் வாய்ப்புகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இங்கு ஆங்கிலம், சிங்களம், தகவல் தொழினுட்பம், இணையத்தள வடிவமைப்பு, கையடக்க தொலைபேசி திருத்தம் உள்ளிட்ட பாடநெறிகள் போதிக்கப்படவுள்ளன.

இப்பாட நெறிகள், பகுதி நேரம், முழு நேரம் என ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. இவற்றை பயில்வதற்காக 242 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரி.எம்.ஹாரூன் தெரிவித்தார்.

## எரிபொருள் தட்டுப்பாடுகளால் விவசாயிகள் பெரும் அவதி

(கல்குடா தினகரன் நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு நாளாந்தம் ஏற்பட்டுவரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றோல், டீசலைப் பெறுவதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அவதியுறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசத்தில் விவசாய செய்கையில் ஈடுபடும் விசாயிகள், வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனத்திற்கான எரிபொருட்களை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போது விவசாய செய்கை இடம்பெற்று வரும் நிலையில், விவசாய செய்கை, தோட்டச் செய்கை மேற்கொள்ள டீசல் தேவைப்படுவதுடன், கடற்றொழில் செல்லும் மீனவர்களுக்கும் டீசலுக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது.

## நிந்தவூர் தபால் நிலையத்திற்கு முன்னால் குப்பைகள் கொட்டுவதால் அசௌகரியம்



(நிந்தவூர் குறூப் நிருபர்)

நிந்தவூர் பிரதேச பிரதான தபால் நிலையத்துக்கு முன்னால், குப்பைகள் கொட்டப்படுவதால் கடமை புரியும் ஊழியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன்,பொதுமக்களும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

குறித்த தபால் நிலையமானது, மாவட்ட தொழிற் பயிற்சி அதிகார சபை மற்றும் பிரதேச சபை போன்ற முக்கிய அலுவலகங்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ளது. இது ஊரின் மேற்குப்புற வயல் பிரதேசத்தில் அமைந்துள்ளதால், இரவு வேளைகளில் திருட்டுத்தனமாக வீட்டுக் கழிவுகளையும், இதர கழிவுகளையும் கொட்டி விட்டுச்செல்கின்றனர். இந்த விடயமானது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சென்ற வாரம் குறித்த இடத்தில் அதிகமான குப்பைகள் கொட்டப்பட்டதால், தபால் நிலைய ஊழியர்கள் அனைவரும் இதனை அகற்றி சுத்தம் செய்தனர். இருந்தபோதும், மூன்று நாட்கள் கழித்து நேற்றைய தினம் (06) அலுவலகத்திற்கு வந்தபோது, மீண்டும் அதே இடத்தில் அதிகமான கழிவுகள் கொட்டப்பட்டிருந்தன.

இதனால் கடமைகளைச் செய்யாமல் இந்த குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக நிந்தவூர் பிரதேச பிரதான தபால் நிலைய ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

## அரச அங்கீகாரம்பெற்ற புகைப்படப்பிடிப்பாளர்களின் பிரச்சினைகளை அவசரமாக தீர்க்குமாறு கோரிக்கை

(ஒலுவில் விசேட, அக்கரைப்பற்று வடக்கு, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)

அகில இலங்கை அரச அங்கீகாரம்பெற்ற படப்பிடிப்பாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற இணைய வழி தொழில்நுட்ப கோளாறை சீர் செய்து தருமாறு, அகில இலங்கை நிபுணத்துவ அனுமதி பெற்ற படப்பிடிப்பாளர்கள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவர் பிரகாஸ் ரங்கநாதன் தெரிவித்தார்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள படப்பிடிப்பாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஞாயிற்றுக்கிழமை (05) அக்கரைப்பற்று "மெங்கோகாடன்" வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அகில இலங்கை அனுமதிபெற்ற படப்பிடிப்பாளர்கள் எதிர்நோக்கி வரும் தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஆகியோருக்கு பல கோரிக்கைகளை விடுத்தோம். எனினும், இதுவரை அவை தீர்த்து வைக்கப்படவில்லை.

பொருளாதார பாதிப்புக்காரணமாக, வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்காக செல்வோர் தொகை அதிகரித்துள்ளது. இந்நிலையில்,கடவுச்சீட்டுக்களை பெறுவோரும் அதிகரித்துள்ளனர். இவற்றை பெறுவதற்காக அனுமதிபெற்ற படப்பிடிப்பு நிலையங்களுடாக, குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட புகைப்படம் குறிப்பிட்ட காலத்திற்குள் சென்றடையவில்லை.

இதனால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

அரச அங்கீகாரம்பெற்ற படப்பிடிப்பாளர்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துடன் ஒப்பந்தங்கள் செய்துள்ளனர். இருந்தபோதும், கடவுச்சீட்டு பெறுபவர்களுக்கான புகைப்படங்களை, குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு இணைய வழியூடாக அனுப்புவதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

# பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் கைதிகளும் ஈடுபடுத்தப்படுவர்



பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் கைதிகளும் ஈடுபடுத்தப்படுவார்கள் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அனைத்து அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளும் நிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

உணவுப் பயிர் உற்பத்தி தொடர்பான ஹம்பாந்தோட்டை மாவட்ட வேலைத்திட்டம் தொடர்பில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மஹிந்த அமரவீர,

இதற்காக இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் இளைஞர்களை வேலைக்கு அமர்த்துவது.

இந்த நோக்கத்திற்காக இராணுவம் மற்றும் சிவில் தற்காப்பு பணியாளர்கள் மற்றும் கைதிகளை ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது. சிறையில் இருந்து வீடு திரும்பியதும் அவர்கள் சாகுபடியில் கிடைக்கும் வருமானத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அரசு அலுவலகங்களில் உள்ள பயன்படுத்தப்படாத நிலங்களில் தொழிலாளர்கள் மற்றும் காவலாளிகளுக்கு விவசாயம் செய்ய அனுமதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

காய்கறிகள், பழங்கள் வீணாவது நம் நாட்டில்தான் அதிகம். காய்கறிகள் வீட்டிற்கு கொண்டு வந்து குளிர்சாதன பெட்டியில் சேமிக்கப்படுகின்றன, ஆனால் அவற்றில் சில வீணாகின்றன.

சமைத்த உணவுகளில் பெரும்பாலானவை அழிக்கப்படுகின்றன. மேலை நாடுகளில், சமைத்த அரிசி சந்தையில் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது. அளவுக்கு அதிகமாக உணவைப் பகிர்ந்து, தூக்கி எறிபவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார். (பா)

# 20 % குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு

## ஆய்வில் தகவல்

கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் குழந்தைகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையில் 20% மான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் என தெரியவந்துள்ளது.

வைத்தியசாலையின் குழந்தைகள் நல சிறப்பு வைத்தியர் தீபால் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார். குழந்தைகளுக்குத் தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்கள் கிடைக்காமையே இதற்கு முக்கியக் காரணம் என விசேட வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,கடந்த காலங்களில் நாங்கள் கவனித்த சில விடயங்களால் இந்த பரிசோதனையை மேற்கொண்டிருந்ததாக வைத்தியர் தெரிவித்தார்.இதன்போது, கார்போஹைட்ரேட் , புரதம் உள்ளிட்ட குழந்தைகளுக்குத் தேவையான முக்கிய ஊட்டச்சத்துக்களின் குறைப்பாடு அவதானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். சீஸ், பட்டர் போன்றவற்றை விட திரவ பால், முட்டை, சோறு மற்றும் பச்சை கீரைகளை உணவில் சேர்க்குமாறும், மஞ்சள் காய்கறிகளை பெற்றுக் கொடுக்குமாறும் வைத்தியர் குறிப்பிட்டார்.

கர்ப்பிணித் தாய்மார்களும் தங்களின் ஊட்டச்சத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்திருந்தார்.

இதே நிலையே வெளியிலும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. 10 சிறுவர்களில் ஒருவர் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு வாழ் குடும்பஸ்தர்களுக்கு உலருணவுப்பொதிகள் விநியோகம்




(ஏ.எஸ்.எம்.ஜாவித், அஷ்ரப் ஏ சமட்)

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராலயம், கொழும்பிலுள்ள குடும்பஸ்தர்களுக்கு உலருணவு பொதிகளை அன்பளிப்பாக வழங்கியது. இதில், மூவினங்களையும் சேர்ந்த இருநூறுக்கும் அதிகமானோர் உலருணவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் றசூல்தீனின் வேண்டுதலின் பெயரில் இளம் மாதர் அமைப்பின் ஒத்துழைப்புடன்,இவர்களுக்கு இப்பொதிகள் வழங்கப்பட்டன. தெமடகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலயத்தில் கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் றசூல்தீனின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாருக்பர்கி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# வேளாண்மை செய்கைகளுக்கான அரைவாசி வேலைகள் பூர்த்தி

(திறப்பனை தினகரன் நிருபர்)

இம்முறை சிறுபோகத்தின் போது செய்கை பண்ணப்படவுள்ள விவசாய நிலத்தின் நூற்றுக்கு 50 வீதமான நிலங்களில் வேளாண்மை நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் தற்சமயம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் கீழ், இது வரையில் சுமார் 2,61,000 ஹெக்டயர் காணிகளில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை சிறுபோகத்தின்போது செய்கை பண்ணப்படவுள்ள காணிகளில் சுமார் 01 இலட்சம் ஏக்கர் காணிகளில் நெற் செய்கைக்குரிய ஆரம்ப கட்ட வேலைகள் இது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாத முற்பகுதி நிறைவடைவதற்கு முன், சிறுபோக விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு விவசாயத் திணைக்களம் விவசாயிகளை கேட்டுள்ளது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் புத்தளம் நகரபிதாவுடன் சந்திப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

ஸ்ரீலங்கா லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்பியுமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் (05) புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக்குடன் சிநேகபூர்வ சந்திப்பில் ஈடுபட்டார். இச்சந்திப்பு புத்தளம் நகரசபை காரியாலயத்தில் (05) நடைபெற்றது. இதன்போது, சமகால அரசியல் விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் மறைந்த தலைவர் மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் ஓராண்டு ஞாபகார்த்த நினைவாக அண்மையில் நகரசபையினால் வெளியிடப்பட்ட கவிதை நூலும் தலைவருக்கு நகர பிதாவினால் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புத்தளம் மாவட்டம் எருக்கலம்பிட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற விஷேட ஒன்றுகூடலிலும், நகரபிதா மற்றும் சக நகரசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வுகள், புத்தளம் அநுராதபுர வீதி கார்ட்ன் வீவ் வளாகத்தில் நடைபெற்றன. அரசியல் பிரமுகர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள் உட்பட பலர் இதில், கலந்துகொண்டனர்.




# சிங்கராஜவனத்தில் காணாமல்போன தாயை மீட்க இராணுவம் வரவழைப்பு

சிங்கராஜ வனத்தில் ஏலக்காய் பறிப்பதற்காக சென்று காணாமல்போன ஐந்து பிள்ளைகளின் தாயை மீட்க இராணுவப் படையணி வரவழைக்கப்பட்டுள்ளது.

கலவான சூரியகந்தை வந்த பிரிவில் வசித்து 46 வயதான தாய் ஒருவர் இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

தந்தை மற்றும் மகனுடன் நேற்று சிங்கராஜ வனத்தினுள் ஏலக்காய் பறிக்க சென்ற இவர், சிறிது நேரத்தில் காணாமல் போனதாக சூரியகந் த பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் மற்றும் சிங்கராஜ வனப்பரிபாலன அதிகாரிகள், பொலிஸார் இணைந்து தேடுதல் நடத்தியும் கிடைக்காத நிலையில் இவரை தேடிக்கண்டு பிடிப்பதற்காக நேற்றுக் குருவிட்ட இராணுவ முகாமின் விசேட இராணுவபடையணி வரவழைக்கப்பட்டது .

இவரைத் தேடி நேற்றும் தேடுதல் நடத்தப்பட்ட போதிலு ம் இவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என சூரியகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.



# காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

பிஹிம்பியகொள்ளாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேந்தாவ இஹலகம பகுதியைச் சேர்ந்த, 74 வயது விவசாயி ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் கடந்த (04) இரவு வீட்டிலிருந்த வேளையில் காட்டுயானை வீட்டு தோட்டத்தினுள் உட்பிரவேசித்தது. சத்தம் கேட்டதும் இவர், வெளியில் வந்துள்ளார். இதன்போதே இவரை, யானை தாக்கியுள்ளது.

இதனால், பலத்த காயத்திற்குள்ளான நிலையில் ஸ்தலத்திலேயே இவர், உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ்

(பேருவளை தினகரன் நிருபர்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை சீனன் கோட்டைபாஸிய்யாபெரியஜும்ஆபள்ளிவாசலில் 131ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் (09) வியாழக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் நடைபெறவுள்ளது.

கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. சீன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இம்மஜ்லிஸ் நடைபெறுகிறது. தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் இடம்பெறுவதுடன், உலமாக்களால் மார்க்க உபன்னியாசங்களும் நிகழ்த்தப்படும்.

ஆரம்ப நிகழ்வில் மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபிக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அஷ்ஷெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) உரைநிகழ்த்துவார்.


சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(சுத்திகரிப்புப் பிரிவு)

பகிரங்கக் கேள்வி 4435T

ASTM A 283 Gr. C தரத்தில் தயாரிக்கப்பட்ட உருக்குத் தகடுகளை (CARBON STEEL PLATES) வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500.00 ரூபாவை 2022 ஜூன் 27ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் கடிதமொன்றைச் சமர்ப்பித்து ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 ஜூன் 29ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

முகாமையாளர் (பொருள்வளம்),
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
சுத்திகரிப்புப் பிரிவு, சப்புகஸ்கந்த,
களனி, இலங்கை..
தொலைபேசி: 11-2400110
மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk

சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(சுத்திகரிப்புப் பிரிவு)

பகிரங்கக் கேள்வி 4426T

மோட்டரினால் இயங்கும் உதிரிப்பாகங்கள் சகிதமான வால்வை (MOTOR OPERATED VALVE WITH SPARES) வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 1,000.00 ரூபாவை 2022 ஜூன் 27ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் கடிதமொன்றைச் சமர்ப்பித்து ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 ஜூன் 29ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

முகாமையாளர் (பொருள்வளம்),
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
சுத்திகரிப்புப் பிரிவு, சப்புகஸ்கந்த,
களனி, இலங்கை..
தொலைபேசி: 11-2400110
மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk

பொருட் கொள்வனவு அறிவித்தல்

அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 66

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைகுழு தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலை மனுக்களைக் கோருகின்றார். தெரிவு செய்யப்படும் விநியோகத்தர்கள், கொள்வனவு கட்டளை கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் விநியோகத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

1. White Printing Paper -30"x40"-70gsm ± 2.5% - 100MT±10%
விலைமனு குறிப்பு இல. : SCP06/WPP/30x40/70/NCB32/2022-03
தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா - 5,000

2. White Printing Paper IK -24"x36"-80gsm ± 2.5% - 1000 Reams
விலைமனு குறிப்பு இல :- SCPO6/WPP/BCF/NCB33/2022-20
தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா :- 5,000.00

3. One Side Coated White Back Board - 31"x43 - 400gsm± 2.5% - 10,000 Sheets
விலைமனு குறிப்பு இல :- SCPO6/Duplex/31"x43"/NCB31/2022-32
தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா :- 1,000.00

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் 2022.06.28 ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும்

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணங்கள் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள , வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப 8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


பெறுகைகுழு தலைவர்.
அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,
கொழும்பு 08.
2022.06.07

தொலைபேசி : 011 - 2694898
இணையதளம் : www.documents.gov.lk

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

பன்னிப்பிட்டிய, தெப்பானம, 103 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பொன்னம்பெரும ஆராய்ச்சிகே பிரீத்திக்கா ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் நதில் துஷாந்த மாலகொட என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 6459 என்ற இலக்கத்தையும் 2007 செப்டம்பர் 04 ஆம் திகதியிடப்பட்டதுமானதும் பொன்னம்பெரும ஆராய்ச்சிகே கெலும் என்பவருக்கு வழங்கப்பட்ட அதிகாரமானது என்னால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதினால் மேற்குறிப்பிட்ட பொன்னம்பெரும ஆராய்ச்சிகே கெலும் என்பவரினால் இதுமுதற்கொண்டு எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

**2022.06.01**
**பொன்னம்பெரும ஆராய்ச்சிகே பிரீத்திகா**




எனது இலக்கம்: DSB/LND/03/FI/38
பிரதேச மஹா செயலகம்,
பெலிஅத்த
2022 யூன் மாதம் 02ஆம் திகதி

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு 2022ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதிய 2280/20 இலக்கத்தையுடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் IIIஆவது பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | - ஹம்பாந்தோட்டை |
| பிரதேச செயலகப் பிரிவு | - பெலிஅத்த |
| கிராமத்தின் பெயர் | - அம்பல |
| அமைவு | - ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இலக்கம் 368 குடாஹீல்ல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அம்பல கிராமம் |
| திட்டவரை இலக்கம் | - இ.கி.வ. 300-19/17 |
| துண்டு இலக்கம் | - 617 |
| விஸ்தீரணம் | - 0.0136 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்**
**பெலிஅத்த**

### எரிசக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
### நீடிப்பு அறிவித்தல்

**யாழ்ப்பாண விமான நிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுடைய 02 எண்ணிக்கையான எரிபொருள் நிரப்பிகளை வடிவமைத்தல் மற்றும் வழங்குதல்**

**B/25/2022**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்குகின்றது.

இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-06-10ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது இப்போது 2022-06-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022-09-23ஆம் திகதி வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (2022-10-21ஆம் திகதி வரை)

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455331, தொலைநகல்: 011-5455424**

Repeat Your Ad For Better Offers

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### கமத்தொழில் அமைச்சு
### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்
### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக 125 ஐ.அமெ. டொலர்கள் பெறுமதியான கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத்தலைவர் (கிழக்கு மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (LKR) மற்றும் செல்லுபடித் திகதி | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-277073-CW-RFB/EP/DPDO/ Rehb.T (5)/2022/001 | திருகோணமலை மாவட்டத்திலுள்ள கடவத்த வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 9,000.00 | 450,000.00 2022 நவம்பர் 24ஆம் திகதி வரை | 180 |
| 02 | LK-MOA-277067-CW-RFB/EP/DPDO/ Rehb.T(14)/2022/004 | திருகோணமலை மாவட்டத்திலுள்ள சின்ன உடவெவ, குடா கன்டமலுவ வெவ, நாவற்குளம் வாவி மற்றும் ஹலம்பவெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 9,000.00 | 715,000.00 2022 நவம்பர் 24ஆம் திகதி வரை | 180 |
| 03 | LK-MOA-276935-CW-RFB/EP/DPDO/ Rehb.T(46)/2022/009 | திருகோணமலை மாவட்டத்திலுள்ள குடாபன்னியக்கட்டியதிவ வெவ புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 9,000.00 | 350,000.00 2022 நவம்பர் 24ஆம் திகதி வரை | 180 |
| 04 | LK-MOA-276951-CW-RFB/EP/DPDO/ Rehb.T(104)/2022/015 | திருகோணமலை மாவட்டத்திலுள்ள கயன்வெவ, கரன்கஹவெவ மற்றும் பெல்லிகடவெலவெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 9,000.00 | 715,000.00 2022 நவம்பர் 24ஆம் திகதி வரை | 180 |
| 05 | LK-MOA-277062-CW-RFB/EP/DPDO/ Rehb.T(119)/2022/018 | திருகோணமலை மாவட்டத்திலுள்ள குடாதிவுல்வெவ, திவுல்வெவ, மற்றும் பலுகஸ்வெவயின் புனரமைப்பு வேலைகள் | C 4 அல்லது அதற்கு மேல் (நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு) | 9,000.00 | 650,000.00 2022 நவம்பர் 24ஆம் திகதி வரை | 180 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை திருகோணமலை, உப்புவெளி, லவ் லேன், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (கிழக்கு மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2054999, தொலைநகல்: 026-2054999, மற்றும் அதே இடத்தில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையரைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

6. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2022 ஜுன் 07ஆம் திகதி முதல் 2022 ஜுன் 28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2022 ஜுன் 20ஆம் திகதி மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.

9. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.

11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஜுன் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (கிழக்கு மாகாணம்), லவ் லேன், உப்புவெளி, திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

12. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2022-06-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**டாக்டர் ஆர்.எம். ஆரியதாச,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (கிழக்கு மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (கிழக்கு மாகாணம்),**
**லவ் லேன், உப்புவெளி,**
**திருகோணமலை.**
**2022-06-07ஆம் திகதி.**

## இலங்கை துறைமுக அதிகார சபை
### பிரசித்த ஏலவிற்பனை அறிவித்தல்
### அழுகும் பண்டங்களின் விற்பனை
### ஏல விற்பனை நடைபெறும் தினம்: 2022.06.08

**எனது இலக்கம்:** LD/S/SLPA/2022/05/PC-19,
LD/S/SLPA/2022/ 05/PC-20,
LD/S/CICT/2022/05/PC-12,
LD/S/CICT/2022/05/PC-16

கொழும்புத் துறைமுகத்தின் JCT மற்றும் CICT முற்றங்களில் வைக்கப்பட்டுள்ள அழுகும் தன்மையிலுள்ள பண்டங்களைக் கொண்டுள்ள ஆறு கொள்கலன்களைக் (பெரிய வெங்காயம். அப்பில், வெள்ளைப்பூடு) கொள்வனவு செய்து அகற்றிக்கொள்வதற்காக 2022.06.08 அன்று 10.00 மணிக்கு பண்டார நாயக்க தடாகத்தின் நலன்புரிக் கட்டிடத்தில் இவ் ஏல விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஏலவிற்பனை வளாகத்திற்கு நுழைவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக மற்றும் விலைமனுப்படிவங்களிற்காக மீளளிக்கப்படாத ரூபா 1000/- இற்கான தொகையை பெசேவ மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 200,000/- இற்கான பிணைத் தொகையையும் செலுத்தி, கெனல்முற்றம், இலக்கம் 15, லோட்டஸ் வீதி, கொழும்பு 01 இலுள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவு, விற்பனைப் பிரிவு அலுவலகத்தில், 2022.06.07 அன்று 08.30 மணி முதல் 12.00 மணி வரையான காலப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்றைய தினம் 13.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை குறித்த முற்றங்களில் பண்டங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களிற்காக (www.slpa.lk) என்ற இணையதிற்குள் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**
**2022.06.07**
**சேவை வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01.**

### காணி எடுத்தற் சட்டம்
### (அத்தியாயம் 460)
### 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல: DSM/YT/LAND/5/8

காணி அமைச்சின் குறிப்பு இல: 13/96/HA/381

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியினை யட்டவத்தை பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ குடியிருப்பு மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ குடியிருப்பிற்காக காணியின் ஒரு பகுதியை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது மேலதிக விபரங்களுக்கு 2022.03.23ஆம் திகதிய 2272/41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | மத்திய |
| மாவட்டம் | மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | யட்டவத்தை |
| கிராமத்தின் பெயர் | தீவில்ல |
| காணியின் பெயர் | டன்கன்வத்தை |
| வரைபட இல (ஆரம்ப வரைபடம்) | ஆ.வ.மா. 1855 |

**டி.ஆர்.கே ஹேரன்நாயக்க**
**பிரதேச செயலாளர்**
**யட்டவத்தை**

**2022.06.01ஆம் திகதி**
**பிரதேச செயலகம்**
**யட்டவத்தை பிரதேச செயலகம்.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### உள்ளூராட்சி திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை

### ஸ்மார்ட் தொலைக்காட்சி (அன்ரோய்ட் தொலைக்காட்சி) ஐ வழங்குவதற்கான பெறுகை

1. ஸ்மார்ட் தொலைக்காட்சியை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திருகோணமலை, கிழக்கு மாகாணம், மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. கீழே குறிப்பிட்டுள்ள பொதியின் ஒப்படைத்தலுக்கான காலப்பகுதியானது உடன்படிக்கையை கைச்சாத்திடும் திகதியிலிருந்து இருபத்தொரு நாட்களாகும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் மூலமாக நடாத்தப்படும்.
   ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 026-2224034 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 026-2222075 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் திருகோணமலை, வரோதயநகர், கிழக்கு மாகாணம், உள்ளூராட்சி திணைக்கள கணக்காளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2022 ஜுன் 8 ஆம் திகதியிலிருந்து 2022 ஜுன் 24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையுமுள்ள அலுவலக நேரங்களில் திருகோணமலை, வரோதயநகர், கிழக்கு மாகாணம், உள்ளூராட்சி திணைக்களம், ஆணையாளரின் பெயரில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவை செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான பிரதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2022 ஜுன் 24 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், திருகோணமலை, வரோதயநகர், கிழக்கு மாகாணம், உள்ளூராட்சி திணைக்களம், ஆணையாளரின் அலுவலகத்தில் விரைவாகவே திறக்கப்படும்.
6. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதித்திகதியிலிருந்து 77 நாட்களுக்கு (எழுபத்தேழு நாட்கள்) 2022.09.09 ஆம் திகதியன்று வரையும் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. 2022ஜுன் 20 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு திருகோணமலை, கிழக்கு மாகாணம், உள்ளூராட்சித் திணைக்களம், ஆணையாளரின் அலுவலகத்தில் நடைபெறுவதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இந்தக் கூட்டத்தில் அவர்களின் சொந்த செலவிலேயே பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இலக்கம் | சேவையின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில். ரூபாவில்) | ஒப்படைப்புக் காலப்பகுதி | தேவைப்படும் விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| EP/14/ACC/FG/G/01-2022 | ஸ்மார்ட் தொலைக்காட்சி (அன்ரோய்ட் தொலைக்காட்சி) ஐ வழங்குவதற்கான பெறுகை | 6 மில்லியன் | 21 நாட்கள் | 60,000.00 | 2022.10.07 ஆம் திகதி வரையும் |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சி திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**
**07.06.2022**




# கண்டி மாவட்டத்தில் 75,000 வீட்டுத் தோட்டங்கள் செய்ய திட்டம்

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

நாட்டில் ஏற்படப் போகும் உணவு தட்டுப்பாட்டை போக்குவதற்கு கண்டி மாவட்டத்தில் 75000 (எழுபத்தி ஐந்தாயிரம்) வீட்டுத் தோட்டங்கள் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

உணவு தட்டுப்பாட்டை நீக்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தவும், இக்காலத்தின் விளைச்சலான பலா, பிஞ்சிபலா, ஈரப்பலாக்காய் ஆகியவற்றின் உணவுக்கான பாவனையை ஊக்குவித்து அதன் மூலம் ஏனைய உணவு உற்பத்தி பொருட்களைச் சேமிக்கவும் மக்களை தூண்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயத்தோடு கால்நடை உற்பத்தி அதிகரிக்கவும், கால்நடை கழிவுகள் மூலம் இயற்கைப் பசளை பாவனையினை அதிகரிக்கும் திட்டத்தை மேலும் ஊக்குவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

தற்பொழுது 75000 வீட்டுத் தோட்டங்களை அடையாளம் கண்டு அவற்றின் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்க பிரதேச செயலாளர் மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தற்போது 52,000 வீட்டுத் தோட்டங்கள் உடனடியாக பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

## விதைதானியங்கள் வழங்கல்



ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் கண்டி மாநகர பிரிவின் ஒருங்கிணைப்பாளர் எம்.தீபன் ஏற்பாட்டில் முதல் கட்டமாக சுமார் 20 நபர்களுக்கு விதை தானியங்கள் நேற்று முன்தினம் (5) வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தக்காளி, மிளகாய், முள்ளங்கி, கறி மிளகாய் போன்ற விதைகள் வழங்கப்பட்டன.

இச் செயற்பாட்டின் மூலம் பெண்கள் தமது உணவுத் தேவையை தாமே பூர்த்தி செய்யக் கூடியதாக இருப்பதுடன் குடும்ப பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடியாதாகவும் இருக்கும். தன்னிறைவான பொருளாதாரத்தை ஏற்படுத்துவதன் மூலம் தமது உணவுத் தேவையினை தாமே பெற்றுக்கொள்ளக் கூடிய குறுங்கால வீட்டு தோட்டப்பயிர் செய்கையை ஊக்குவிப்பதாகவும் தீபன் இங்கு கருத்து தெரிவித்தார்.

## பெருந்தோட்டப்பகுதிகளில் தமிழக அரசின் நிவாரணம் வழங்கும் பணி துரிதம்

### கிடைக்காதவர்கள் பிரதேச செயலாளரை தொடர்பு கொள்ளுமாறு எஸ். ஆனந்தகுமார் கோரிக்கை



தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு மலையக பகுதிகளில் தோட்ட நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் சில குறைப்பாடுகள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழக மக்களின் நிதி உதவியின் கீழ் அண்மையில் இலங்கைக்கு 2 பில்லியன் பெறுமதியான நிவாரணப் பொதிகள் கிடைக்கப்பெற்றது. கட்டம் கட்டமாக இந்த நிவாரணம் இலங்கைக்கு கிடைக்கப்பெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த நிவாரணத்தை பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட அரசியல் தலையீடுகள் காரணமாக தற்காலிகமாக நிவாரணத்தை வழங்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. பெருந்தோட்டப் பகுதிகளுக்கு நிவாரணத்தை விரைவாக வழங்கும் தேவையை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்று அந்தப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

பெருந்தோட்டப்பகுதிகளில் தோட்ட நிர்வாகத்தினரால் மாத்திரமே நிவாரணப் பொதிகளை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இங்கு எவ்வித அரசியல் தலையீடுகளும் இருக்கக் கூடாது. அவ்வாறான தகவல்கள் இருந்தால் உடனடியாக தெரியப்படுத்தவும்.

இதேவேளை, தோட்டத்தில் பணிபுரியாதவர்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கப்படவில்லையென குற்றச்சாட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறானவர்கள் உடனடியாக பிரதேச செயலாளரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

## கண்டி, தன்வில, கெலாபொக்க தோட்டப் பிரச்சினைக்கு செந்தில் தொண்டமான் தலையீட்டால் 24 மணித்தியாலத்தில் தீர்வு



கண்டி, தன்வில, கெலாபொக்க தோட்டத்தில் சிறுவர்களை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்க தோட்ட நிர்வாகம் மறுப்பு தெரிவித்ததை அடுத்து தோட்ட மக்களால் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து செந்தில் தொண்டமான் தலையீட்டால் இப்பிரச்சினைக்கு 24 மணிநேரத்திற்குள் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

கண்டி, தன்வில, கெலாபொக்க தோட்டத்தில் வெளிமாவட்டங்களில் பணிபுரிபவர்களின் பிள்ளைகள் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்திலே அனுமதிக்கப்பட்டு வந்தனர். தோட்ட நிர்வாகம் வெளிமாவட்டங்களில் பணிப்புரிபவர்களின் பிள்ளைகளை சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் அனுமதிக்க திடீரென மறுப்பு தெரிவித்தது. இதையடுத்து, இது தொடர்பாக தோட்ட பொது மக்களால் செந்தில் தொண்டமான் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

செந்தில் தொண்டமான் இப்பிரச்சினை தொடர்பாக தோட்ட முகாமையாளரை தொடர்பு கொண்டு கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வினைப்பெற்றுத் தந்துள்ளார்.

இழுபறியாக இருந்த இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வினைப் பெற்று தந்தமைக்காக அத்தோட்ட மக்கள் செந்தில் தொண்டமானுக்கு நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

## போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 12 பேர் கைது

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நாவலப்பிட்டி நகரில் மிக நீண்ட காலமாக போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி பொலிஸார், கம்பளை பொலிஸார் மற்றும் கம்பளை போதை ஒழிப்பு பிரிவு அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே குறித்த 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதில் பிரதான சந்தேகநபர் ஒருவரும் ஏனைய 11 பேரும் போதை விற்பனை பிரதிநிதிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை கைது செய்த போது, அவர்களிடமிருந்து 2880 மில்லிகிராம் ஹெரோயின், 560 மில்லிகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29 - 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் நாவலப்பிட்டி, ஓவிட்ட, ஆகரஓயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேநபர்கள் நேற்றைய தினம் நாவலப்பிட்டி பதில் நீதவான் சுனெத்ரா கொட்டவலகெதர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.





புஸ்சலாவ வகுகப்பிட்டிய காட்டுமாரியம்மன் தேர் ஊர்வலம் புதன்கிழமை இடம்பெற்றது. படம்:தெல்தோட்டை தினகரன் நிருபர்

## 6 மாத காலத்துக்குள் இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்கள்





**தலவாக்கலை குறூப் நிருபர்**



நாம் இன்றைய சூழ்நிலையில் அரசியல் பேசிக்கொண்டிருக்க முடியாது. மக்களுக்கு அரசியல் களம் பற்றி கூறவேண்டும். இந்த 6 மாத காலத்துக்குள் இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (5) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மலையக மக்கள் முன்னணியின் பிரதேச தலைவர்மார்கள் கலந்துக்கொண்ட கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் போது கடந்த 37 வருடங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் பல பதவிகளை வகித்து வந்த முன்னாள் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் இ.தொ.கா வின் உபதலைவருமான கருப்பையா ஜெயராம் உட்பட பலர் மலையக மக்கள் முன்னணியில் நேற்று உத்தியோக பூர்வமாக இணைந்து கொண்டனர். இதன் போது மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் பதவியையும் ஜெயராமிற்கு இராதாகிருஷ்ணன் வழங்கிவைத்தார். இந்நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட விரிவுரையாளரான எஸ். விஜயசந்திரன், முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலாளர் சுப்பிரமணியம், மலையக மக்கள் முன்னணியின் பொருளாளர் புஸ்பா, உப தலைவர் எஸ். ஜெயகுமார், வலப்பனை பிரதேசசபை உறுப்பினர் ஜனார்த்தன் உட்பட தோட்ட கமிட்டி தலைவர்களும் கலந்துக்கொண்டனர்.

அங்கு இராதாகிருஷ்ணன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

நாம் இன்றைய சூழ்நிலையில் அரசியல் பேசிக்கொண்டிருக்க முடியாது. மக்களுக்கு அரசியல் களம் பற்றி கூறவேண்டும். இந்த 6 மாத காலத்துக்குள் இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

## பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேகம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி தேவஸ்தான நூதன இராஜ கோபுர அஷ்டபந்தன நவகுண்டபக்ச பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6.7.2022 ஆம் திகதி ஆகம விதிப்படி இடம்பெற திருவருள் கைகூடியுள்ளது.

இம் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிலைப்படுத்திய கிரியைகள் எதிர்வரும் 26.06.2022ல் ஆரம்பமாகும். மஹா கணபதி வழிபாடு, கணபதி ஹோமம், பரமசாயிபத வாஸ்து சாந்தி, கும்ப யாக சாலா பிரவேசம், ஸ்கந்த ஹோமம், யாக பூஜை, பாவனாபிஷேகம், வல்லப கணபதி வழிபாடு, ஞான கணபதி வழிபாடு, ஸ்பரிசாகுதி ஆகிய கிரியைகள் தொடர்ச்சியாக இடம்பெறும். அதனைத்தொடர்ந்து, சுவாமிகளது சிலைகளுக்கு எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வுகள் 01.07.2022 முற்பகல் 10.00 மணிமுதல் 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிவரை நடைபெறும். மேலும் கிரியைகள் இடம்பெற்று 06.07.2022ல் ஸ்ரீ விநாயகப்பெருமான், வள்ளி, தேவசேனா சமேத அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி, முத்துமாரி அம்பாள், வழிப்பிள்ளையார், பாலமுருகன், தண்டாயுதபாணி, தட்சணாமூர்த்தி, ஸ்ரீ சந்தான கோபாலர், ஸ்ரீ துர்க்கையம்பாள், மஹாவிஷ்ணு, ஸ்ரீ லக்சுமி நாராயணர் மற்றும் நவக்கிரக மூர்த்திகள், வைரவர், தம்பப்பிள்ளையார், மயில், பலிபீடம், சண்டேஸ்வரர் உள்ளிட்டு ஸ்தூபிகள் ஆகியோருக்கு திருக்குடத்திரு மஞ்சனப் பெரும் சாந்தி நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

தேவஸ்தான பிரதம குரு ஸ்கந்தகாதஸ்ரீ, கீர்த்திஸ்ரீ, குமரகுருமணி, சிவஸ்ரீ பாலகுகேஸ்வர சிவாச்சாரியார் (ஜே.பி) உள்ளிட்ட 35 உயர் சிவாச்சாரியார்கள் இம் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவினை ஆகம விதிப்படி நடாத்தி வைப்பர். இறுதியாக மகேஸ்வர பூஜையுடன் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

## பெண்ணின் சடலம் மீட்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

திருமணமாகி இரண்டு மாதங்களான பெண் ஒருவர் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டு வீதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்டிருந்த இப்பெண்மணியின் கழுத்தில் மட்டுமன்றி முகத்திலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட பெண் இப்பிரதேசத்தில் தனியார் நீர் விநியோக திட்டம் ஒன்றில் மேற்பார்வையாளராக கடமையாற்றியுள்ளதாகவும் இவரது கணவர் இந்நிறுவனத்தில் சாரதியாகக் கடமையாற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அவுஸ்திரேலியாவுடனான கிரிக்கெட் போட்டி

# 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக பெறப்படும்

### செயலாளர் மொகான் டி சில்வா

## இலங்கை- அவுஸ்திரேலிய முதல் 20க்கு20 போட்டி இன்று கொழும்பில் ஆரம்பம்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக பெறப்படும் என இலங்கை கிரிக்கெட் செயலாளர் மொகான் டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 20 க்கு 20 போட்டி தொடர்பாக நேற்று கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இலங்கை தற்பேது பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள இந்த நிலையில் அவுஸ்திரேலிய அணி இலங்கையில் கிரிக்கெட் விளையாட வந்திருப்பது மிக முக்கிய விடயமாகும்.அது மட்டுமல்லாமல் சர்வதேசத்துக்கும் இது ஒரு எடுத்துக் காட்டாகும் என்றும் அவர் தெரிவித்தார். இலங்கையில் கிரிக்கெட் விளையாட முடியாது என்ற எண்ணம் இந்த தொடரின் மூலம் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவுஸ்திரேலிய அரசுக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கும் நாங்கள் இந்த வேளையில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த தொடர் இடம்பெற்றால் இலங்கையில் சர்வதேச கிரிக்கெட் தொடர்களை முறையாக நடத்த முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த தொடரில் கிடைக்கும் நிதியின் மூலம் எமது நாட்டில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பொருளாதார மீட்சிக்கு அந்த நிதி பயன்படுத்தபடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த தொடர் சுமார் 52 நாட்கள் கொண்டதாகும்.இதற்கு பின்னர் பாகிஸ்தான் அணி ஜூலை மாதம் நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.அத்துடன் இந்த முறை எந்த வித கொரோனா கட்டுப்பாடுகள் இல்லாமல் போட்டிகளை பார்வையாளர்கள் பார்வையிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன ,ஒரு நாள் அணியின் தலைவர் தசுன் சானக்க மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா மற்றும் அனுசரணையாளர்களும் பங்கேற்றமை விசேட அம்சமாகும்.



(படங்கள்: சுதத் மலவீர)

அவுஸ்திரேலியா இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடரானது, மூன்று போட்டிகள் கொண்ட ரி 20 தொடரில் முதல் போட்டி இன்று 7ம் திகதி கொழும்பு ஆர். பிரேமதாச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எனவே, தொடரின் ஏனைய போட்டிகளுக்கான டிக்கெட்டுகளை www.srilankacricket.lk என்ற இணையத்தளம் ஊடாகவும், இலங்கை கிரிக்கெட் தலைமையகம், கண்டி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானம் (ஜூன் 8ம் திகதி முதல்) மற்றும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம் (ஜூன் 26ம் திகதி முதல்) போன்றவற்றில் நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும்.

அவுஸ்திரேலிய அணியானது 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-06-2022 இல. 11

STREAM LIKE A BOSS!
இலங்கையின் முதன்மையான, அதிவேகமான மற்றும் விஸ்தரிக்கப்பட்ட PREMIUM FIBRE வலையமைப்பு.
SLTMOBITEL
FIBRE
Get Fibre www.sltmobitel.lk

## இலங்கை அணி எதிர்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய ரி 20 தொடரின் பிரதான அனுசரணையாளராக Daraz

அவுஸ்திரேலியாவின் இலங்கை சுற்றுப்பயணம் இன்று 7ம் திகதி Daraz கோப்பை ரி 20 தொடருடன் தொடங்குகிறது.

அவுஸ்திரேலியாவின் இலங்கை சுற்றுப்பயணம் 6 வருடகால இடைவெளிக்குப் பிறகு நடைபெறுவதால், நாடு முழுவதும் மிகவும் எதிர்பார்க்கப்பட்டு கிரிக்கெட் நிகழ்வாக அமைகின்றது. மொத்தம் மூன்று போட்டிகள் கொண்ட 'Daraz கோப்பை' ரி 20 தொடர் ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் கண்டி பல்லேகல்ல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று 07, 08, மற்றும் 11 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

Daraz Cup
SRI LANKA VS AUSTRALIA
T20 series 2022
SKYEXCH



நாட்டின் அனைத்து விதமான சவால்களையும் தாண்டி இலங்கையர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டிற்காக ஒரே குரலில் உற்சாகப்படுத்தும் ஓர் நிகழ்வாக கிரிக்கெட் மாறியுள்ளது. தேசிய விளையாட்டு அரங்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ள ஒரு வியாபாரக்குறியாக, நடைபெறவிருக்கும் இலங்கை எள அவுஸ்திரேலியா ரி 20 சர்வதேச தொடரின் பிரதான அனுசரணையாளராக Daraz தனது பங்கை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

பிரதான அனுசரணையைப் பற்றி Daraz Sri Lanka முகாமைத்துவப் பணிப்பாளர் ரக்கில் பெர்னாண்டோ கூறுகையில்:

'இலங்கை அணியின் நாட்காட்டியில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா இடையிலான விறுவிறுப்பான 'Daraz' ரி 20 கிரிக்கெட் போட்டிக்கு வலுவூட்டுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களின் இளம் மற்றும் ஆற்றல்மிக்க இலங்கை கிரிக்கெட் அணிக்கு ஆதரவளிப்பது மற்றும் சர்வதேச விளையாட்டுக்களில் பெரும் முன்னேற்றம் அடைய நமது இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பது இப்போது நமது வர்த்தக குறியின் முக்கியமான ஒரு பகுதியாக மாறியுள்ளது.

இளைஞர்களை மையமாகக் கொண்ட வியாபாரக் குறியாக, நமது நாட்டிற்கு பெருமை சேர்ப்பதற்காக, குறிப்பாக சிரமங்கள் மற்றும் சவால்கள் காணப்படும் இக்காலகட்டத்தில், எங்கள் வீரர்களுக்கு நம்பிக்கையை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருப்பது எங்களின் கடமையாக நாங்கள் கருதுகிறோம்.' எனக் கூறினார்.

பல ஆண்டுகளாக, இலங்கையில் மிகவும் விரும்பப்படும் விளையாட்டை ஆதரிப்பதில் Daraz ஒரு முதன்மை பங்காளராக தனது பங்கினை வகித்துள்ளது, கிரிக்கெட் விளையாட்டின் விறுவிறுப்புத் தன்மை அப்போதைய சிலோனின் 1800 காலப்பகுதிகளிலேயே இருந்து வந்தன. சமீப காலங்களில், மிகப்பெரிய ஒன்லைன் ஷொப்பிங் தளத்தின் இலங்கை அணிக்கான இலங்கை கிரிக்கெட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு அணி அனுசரணையாளராக செயற்பட்டது மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கைக்கான இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்காக SLC உடன் கூட்டு சேர்ந்தது. மேலும் இலங்கை பிரீமியர் லீக் இற்கும் கைக்கோர்த்ததுடன் Daraz App இல் நேரடி ஒளிபரப்பையும் செய்தது. 2020 இல் தென்னாபிரிக்காவில் இலங்கை சுற்றுப்பயணத்தின் டெஸ்ட் தொடருக்கு இணை அனுசரணை வழங்கியது.

**பிரெஞ்சு பகிரங்கத்தில் அசத்தல்:**



## 22வது கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றார் ரபேல் நடால்

ஸ்பெயின் வீரர் ரபேல் நடால்,நோர்வே வீரர் கேஸ்பர் ரூட் ஆ கி யோர் பலப்பரீட்சை நடத்தின ர் . 14வது முறையாக பிரெஞ்சு ப கி ரங்க பட்டத்தை வென்றுள்ளார்.

பிரெஞ்சு பகிரங்க டென்னிஸ், ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டத்துக்கான இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், நோர்வே வீரர் கேஸ்பர் ரூட் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர். துவக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய நடால், 6-3, 6-3, 6-0 என்ற செட் கணக்கில் கேஸ்பர் ரூட்டை வீழ்த்தி, சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் 14வது முறையாக பிரெஞ்சு பகிரங்க பட்டத்தை வென்றுள்ளார். அத்துடன், இது அவருக்கு 22வது கிராண்ட்ஸ்லம் பட்டம் ஆகும். பிரெஞ்சு பகிரங்க இறுதிப் போட்டியில் மிகச்சிறந்த வீரர் கேஸ்பருடன் விளையாடியது மிகவும் மகிழ்ச்சி அளித்ததாகவும், அவரது சாதனைகளுக்காக அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதாகவும் நடால் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.